உ

# அருள் ஒளி



மஹா சிவராத்திரி சிறப்பு மலர்

மாசி

93

வெளியீடு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

2014

# சாதனை படைப்பது எப்படி?



- ஒழுக்கம் நிறைந்த மனிதனே நிஜமான கல்விமான்.
- தன்னம்பிக்கை இழப்பது தெய்வ நம்பிக்கையை இழப்பதற்குச் சமன்
- குற்றம் காண்பதைவிட குணத்தைக் காண்பதுதான் உயர்ந்தகுணம்.
- பெற்றுக் கொள்பவன் அல்ல, கொடுப்பவனே பேறு பெற்றவன்.
- தன்னலத்தை ஒழிப்பதில் தான் மகிழ்ச்சி அடங்கி இருக்கிறது. உன்னைத் தவிர வேறு யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.
- தன்னை மறந்து பணியாற்றும் போதுதான் கடமையில் சாதனை படைக்க முடியும்.
- கோபப்படும் மனிதனால் சிறப்பாக பணியில் ஈடுபட முடியாது. மன்னிக்கும் மனோபாவம் கொண்டவனே, தனது பணியில் தீவிரமாகச் செயற்பட முடியும்.
- எல்லோருக்கும் ஒரே மாதிரியான இன்பம் தரும் பொருள் உலகத்தில் இல்லவே இல்லை.
- கருணை நிறைந்தவர்களாக மாறுங்கள், ஏனெனில் கருணையே இனிய சொர்க்கம்.
- எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள், ஆனால் உங்கள் கருத்தில் உறுதியாய் இருங்கள்.

**- விவேகானந்தர்**

உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்

மாசி மாத மலர்
2014

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

பதிவு இல. : QD / 74 / NEWS / 2006Y



## யாழ். பல்கலைக்கழக பொறியியற் பீடம் பயன்தர வாழ்த்துவோம்

இலங்கையில் சுதேசிகளுக்குரிய உயர்கல்விப் பீடமாகக் கருதக்கூடிய பல்கலைக்கழகம் உருவாக வேண்டும் என முதலில் குரல் கொடுத்தவர் சேர். பொன். அருணாசலம் அவர்கள். இலங்கைச் சட்டசபையில் முதலாவதாக பல்கலைக்கழகம் பற்றிய சிந்தனையை எடுத்துரைத்த சைவத்தமிழன் என்ற பெருமை அவரைச் சாரும். பிரித்தானிய அரசு, அருணாசலம் அவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தது. இலங்கையில் பல்கலைக்கழகம் அமைப்பதற்காக ஒரு குழுவை நியமித்து, அக்குழுவில் பிரதான உறுப்பினராக அருணாசலம் நியமிக்கப்பட்டார். அன்னாரின் இடைவிடாத முயற்சியே சகல வளமும் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகம் பின்னாளில் அமைய வித்திட்டது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முக்கியமான மண்டபத்துக்கு சேர். பொன். அருணாசலம் மண்டபம் என்று பெயர் வைப்பதற்கும் அதுவே மூலகாரணம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் பெயரும் முக்கிய விடுதிச்சாலைக்கு அன்று சூட்டினர்.

இலங்கையில் தமிழ்த் தலைவர்கள் பல்கலைக்கழகம் அமைப்பதற்குப் பாடுபட்ட வரலாற்றை இன்றைய தென் இலங்கைத் தலைவர்கள் யார் நன்றியோடு நினைவில் வைத்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் 1974இல் அமைப்பதற்கும் சேர். பொன். இராமநாதனின் சொத்தே பேருதவியாக அமைந்தது. 1978இல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை உருவாக்குவதற்கு அயராது உழைத்தவர் அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள். மருத்துவபீடம் அமைப்பதற்கு, காணியை வழங்குவதற்கு முதலில் உதவியவர் கொக்குவில் பிரம்படி ஞானவைரவர் அறங்காவலர் அமரர் சுப்பையா ஆறுமுகதாசன் அவர்கள். சூத்திரக் கிணற்றோடு கூடிய தோட்டத்தை அவர் வழங்க முன்வந்ததன் விளைவே மருத்துவபீடம் உருவாவதற்கு வித்திட்டது. பின் அயற்காணிகளைக் கொள்வனவு செய்து விரிவாக்கம் பெற்றது.

கிளிநொச்சியில் பொறியியற் பீடம் உருவாக்க வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அன்று விளங்கிய பொறியியற்துறைப் பேராசிரியர் அமரர் அ. துரைராசா அரும்பாடுபட்டார். போர்ச்சூழல் வாய்ப்பு ஏற்படவில்லை. அறிவியல் நகர் எனக் கிளிநொச்சி மாவட்டத்தில் பல வருடமாகப் பேசப்பட்ட நிலத்தில் பொறியியற்பீடம் உருவாக்கப்பட்டு, சென்ற மாதம் பால் காய்ச்சும் வைபவம் நிறைவு பெற்றமை மகிழ்ச்சியைத் தருகிறது. பொறியியற் துறைசார் தமிழர்கள் உலகில் பல பல்கலைக்கழகங்களில் நிபுணத்துவர்களாகத் திகழ்கிறார்கள். இவர்கள் தாயகத்தில் உருவாகியுள்ள பொறியியற் பீடத்தை வளர்க்க முன்வரவேண்டும். சகல வளமும் நிறைந்த உயர் பல்கலைக்கழகமாக இப்பீடம் விரிவுபட்டு பயன் தரவேண்டுமென்று இறைவனை வேண்டுவோம். இன்றைய துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களின் காலத்தில் இப்பீடம் திறக்கப்படுவது அவருக்கும் பெருமையாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

- ஆசிரியர்

உ

# மகா சிவராத்திரி விரதம்

மாதந்தோறும் அமாவாசை நாளில் இருந்துவரும் 14ஆவது திதியன்று சிவ ராத்திரி அல்லது பிரதோஷ நாட்களாக வழி படப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் கிருஷ்ணபக்ஷ தினத்தை இந்த தினமாகக் கடைப்பிடிக்கிறோம். இந்த நாளில் சிவன் கோயில்களுக்குச் சென்று ஈஸ்வரனை வழி பட்டால் மன அமைதி, வாழ்க்கையில் முன் னேற்றம், தீய சக்திகள் வேரோடு அகலுதல் போன்ற நன்மைகள் நமக்கு உண்டாகும்.

மாசி அல்லது மகா மாதத்தில் அமா வாசையில் இருந்து 14வது சதுர்த்தசி யன்று வருவது மகா சிவராத்திரியாகும். இந்த நாளின் சிறப்புகள் குறித்து கருட புராணம், கந்த புராணம், பத்ம புராணம், அக்னி புராணம் உள்ளிட்ட பல்வேறு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகா சிவராத்திரி நாளில் விரதம் இருப்போருக்குக் கிடைக்கும் மகத்து வங்கள் என்ன என்பது பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிவராத்திரி வரலாறு

மாசிமாதம் தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் அம்பிகை சிவபெருமானை வணங்கியதாலேயே இந்த நாளில் மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது.

பிரளய காலத்தின்போது பிரம்மனும், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்துவிட்ட நிலையில், இரவுப் பொழுதில் அம்பிகை உமாதேவி, பரமேஸ்வரனை நினைத்து பூஜை செய்தாள். நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள். பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி, அடியேன் தங்களைப் பூசித்த இந்த இரவை, தேவர்களும் மனி தர்களும் தங்கள் திருநாமத்தாலேயே – அதாவது 'சிவராத்திரி' என்றே கொண்டாட வேண்டும் என்று வேண்டினாள்.

சிவராத்திரி அன்று, சூரியன் மறைந்தது முதல் – மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை; தங்களை (சிவனை)ப் பூஜை செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாவிதமான பாக்கி யங்களையும் தந்து முடிவில் மோட் சத்தையும் அளிக்க வேண்டும். அருள்புரி யுங்கள் என்று அன்னையானவள் வேண்டிக் கொண்டாள்.

சிவபெருமானும், அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள்புரிந்தார். அந்த இரவே 'சிவராத்திரி' என வழங்கப்பட்டு, அனைவ ராலும் கொண்டாடப்படுகிறது. பகல் பொழுது பரமேஸ்வரனுக்கும், இரவுப் பொழுது அம்பிகையான உமாதேவிக்கும் உரியது என்பது நியமம். ஆனால் சிவராத்திரி என்பது அம்பாளின் வேண்டுதலின்படி கொண்டாடப் படுவதால் அது சிவனுக்கு உரியதாயிற்று.

## கடைப்பிடிக்கவேண்டிய விரதமுறை

மகா சிவராத்திரி நாளில் பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விரத முறைகள் பற்றிப் பார்ப்போம்.

சிவராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மைவிட்டு நீங்கிப் போகும். இவர்தான் சிவராத்திரி விரதம் இருக்கலாம். இவர் இருக்கக்கூடாது என்ற விதியெல்லாம் கிடையாது. யார் வேண்டுமானாலும் சிவராத்திரி விரதத்தை மேற்கொள்ளலாம். புராணங்களில் சொல்லப்பட்ட மற்றைய பல விரதங்களை நெடுங்காலம் கடைபிடிப்பது, நூறு அசுவமேத யாகம் செய்வது, பல முறை கங்கா ஸ்நானம் செய்வது ஆகிய அனைத்தையும் மேற்கொண்டாலும், ஒரு சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதற்கு ஈடாகாது.

சிவராத்திரிக்கு முதல் நாள் ஒரு வேளை மட்டுமே உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி அன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு, சூரிய உதயத்தின் போது காலையில் வீட்டில் செய்ய வேண்டிய பூஜையை முடிக்க வேண்டும்.

அதன் பின் சிவன் கோவிலுக்குப் போய் முறைப்படி தரிசனம் செய்ய வேண்டும். பூஜை செய்யும் இடத்தை மலர்களால் அலங்கரித்து நண்பகலில் குளித்து மாலையில் சிவார்ச்சனைக்கு உரிய பொருட்களோடு சிவன் கோவில் சென்று ஏற்பாடுகளைச் செய்யலாம். மாலையில் மீண்டும் குளித்து வீட்டில் சிவபூஜை செய்ய வேண்டும். வீட்டிலேயே இரவின் நான்கு ஜாமங்களிலும் முறைப்படிப் பூஜை செய்தலும் நலம். வில்வ இலைகளால் அர்ச்சனை செய்தல் கூடுதல் உத்தமம்.

மகா சிவராத்திரி விரதம் மேற்கொள்பவர்கள் கோபத்தைக் கட்டுப்படுத்துவதுடன், பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சிந்தையில் அமைதியுடன் சிவ புராணத்தை பாடிக் கொண்டிருக்க வேண்டும். பற்றற்று இருப்பதுடன் பேராசைகளைக் கைவிட்டு பிறருக்குக் தீங்கிழைக்காமல் இருத்தல் வேண்டும்.

மாலையில் குளித்து உலர்ந்த ஆடையணிந்து நெற்றியில் திருவெண்ணீறு அணிந்து, கையில் உருத்திராட்ச மாலையுடன் வீடுகளில் சிவபூஜை செய்தோ அல்லது கோயில்களுக்குச் சென்றோ சிவனை வழிபடுதல் வேண்டும். கோயில்களிலும் சிவபூஜை செய்யலாம். ஐந்தெழுத்து மந்திரமான சிவாய நம என்ற சொல்லை உச்சரித்து பூஜிக்க வேண்டும். கலச பூஜையுடன் லிங்கத்தை வைத்தும் பூஜை செய்யலாம். பூக்கள் மற்றும் அபிஷேகப் பொருட்களை கோயில்களுக்கு வாங்கிக் கொடுத்தல் நலம்.

பின்னர் சிவபெருமானின் வெவ்வேறு பெயர்களான பவ, சர்வ, ஈசான, பசுபதி, உக்ர, ருத்ர, பீமா மற்றும் மகாதேவா என்று கூறி பூஜிக்க வேண்டும். சிவபெருமானின் சகஸ்ர நாமத்தைச் சொல்வதுடன், வில்வ இலைகளைக் கொண்டும் பூஜிக்கலாம். வில்வ இலைகளைக் கோயில்களுக்கும் வழங்கலாம்.

பின்னர் நைவேத்யம் படைத்து வழிபட வேண்டும். சிவ, ருத்ர, பசுபதி, நீலகண்டா, மகேஸ்வரா, ஹரிகேசா, விருபாக்ஷா, சாம்பு, சூலினா, உக்ரா, பீமா, மகாதேவா ஆகிய 12 பெயர்களை உச்சரித்து பூக்களால் அர்ச்சிக்க வேண்டும். கோயில்களில் பிரதட்சிணமாக வந்து சிவபெருமானின் மூல மந்திரத்தை 108 முறை பாராயணம் செய்ய வேண்டும்.


அன்றைய தினம் இரவில் நான்கு ஜாமங்களிலும் தூங்காமல் பூஜை செய்து, மறுநாள் விடியற்காலையில் நீராடி, காலை அனுஷ்டானத்துடன் உச்சிக்கால அனுஷ்டானத்தையும் அப்போதே முடிக்க வேண்டும். அதன் பின் தீட்சை தந்த குருவைப் பூசை செய்துவிட்டு, உடைகள் மற்றும் உணவினை அந்தணர்க்குத் தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும் விதமாக உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி நாளில் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு ஜாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால், பழங்களை உண்ணலாம்.

பூஜை செய்ய முடியாதவர்கள் நான்கு ஜாமத்திலும் சிவபுராணம் கேட்டும், சிவத்துதிகளைச் சொல்லியும், சிவன் கோயிலுக்குச் சென்று அவ்விரவைக் கழித்தும் சிவனை வழிபடலாம். சிவ ராத்திரி மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ, பகல் பொழுதைக் கழிக்க வேண்டும். பிறகு மாலை நெருங்கியதும் மாலை அனுஷ்டானங்களை முடித்து, அன்றிரவும் எதுவும் உண்ணாமல் இருந்து உறங்க வேண்டும்.

சிவராத்திரி தினத்தன்று முழு உபவாசத்தைக் கடைப்பிடித்தால் எம்பெருமான் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவதுடன் மகிழ்ச்சியையும், வாழ்வில் முன்னேற்றத்தையும் அளிப்பார் என்பது ஐதீகம். தவிர மகா சிவராத்திரி விரதம் இருப்போருக்கு நற்கதி கிடைப்பதுடன் இப்பூத உடல் மடிந்த பின் சொர்க்கத்தையும் இறைவன் அளிப்பான் என்பதே பின்னணித் தத்துவம்.

இப்படி இருபத்து நான்கு வருடங்கள் சிவராத்திரி விரதமிருந்தால் அவர்கள் சிவகதி அடைவார்கள். அத்துடன் அவர்களின் மூவேழு தலைமுறைகளும் நற்கதி அடைந்து, முக்தியை அடைவது சத்தியம் என்கிறது புராணங்கள்.

## பால்போல் வாழுங்கள்!



**நல்லவர்களைப் பால் போன்ற மனம் படைத்தவர்கள் என்று புகழ்ந்து கூறுவோம். பால் வெண்மையான நிறம் என்பதற்காக அப்படிச் சொல்லவில்லை. ஏன் சுண்ணாம்பும் வெண்மையான நிறம் கொண்டதுதான். ஆனாலும் பாலைத்தான் உயர்வாகச் சொல்வோம். பாலில் எவ்வளவு தண்ணீர் கலந்தாலும் அதன் நிறம் மாறாது. அத்துடன் பாலோடு சேர்ந்த தண்ணரின் மதிப்பும் உயரும். இதனால்தான் நல்லமனம் படைத்தவர்களை பாலோடு ஒப்பிட்டுச் சொல்கிறோம்.**

**– திருமுருக கிருபானந்தவாரியார்**

# முக்திக்கு வழிகாட்டும் சிவராத்திரி விரதம்



பாவ வினைகளால் உண்டான பிணி, தடை, தோஷம், பாவங்கள், கர்ம வினைகள், மரண பயம், எம பயம் போன்றவை நீங்கிட விரதங்கள், வழிபாடுகள் காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் சிவனுக்கு உகந்த சிவராத்திரி மிக முக்கிய விரத நாளாகும்.

**பஞ்ச ராத்திரிகள் :**

சிவனுக்குரிய ராத்திரிகள், நித்ய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவ ராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐந்து வகைப்படும். மாசி மாதம் தேய்பிறை, சதுர்த்தசி திதியில் அம்பாள் சிவனை வணங்கி பூஜித்ததால் மகா சிவராத்திரி என பெயர் பெற்றது. பூஜைகளில் ராத்திரி பூஜைகளுக்கு சில மகத்துவங்கள் உண்டு. பரிவார தேவதைகள், காவல் தெய்வங்கள், சுடலைமாடன், முனீஸ்வரன், இருளப்பர் போன்ற தேவாதி களுக்கு ராத்திரி பூஜைகள் விசேஷம். இவர்கள் எல்லாம் சிவனின் அம்சமாகக் கருதப்படுகிறார்கள். இதற்காகவே 'ஷராத் ரீசூக்தம்' என்ற பாராயணம் தனியாக உள்ளது.

**சிவராத்திரி வரலாறு :**

புராணங்களில் சிவபெருமானின் திருவிளையாடல்கள் பலவாறு சொல்லப் பட்டுள்ளது. சிவனின் கண்களை பார்வதி தேவி விளையாட்டாக மூடியதால் ஈரேழு உலகங்களும் இருளில் மூழ்கின. அந்த நாளே சிவராத்திரி என்பர். ஆலகால விஷத்தை உண்ட சிவபெருமான் திரு

நீலகண்டர் என பெயர் பெற்றார். அன்றைய தினம் இரவு தேவர்கள் பரமேஸ் வரனை வணங்கித் துதித்தனர். அந்நாளே சிவராத்திரி எனக் கூறுவர். மார்க்கண்டேயன் உயிரைக் காக்க சிவன், எமனை காலால் உதைத்தார். அதன்பின் எமனை உயிர்ப்பிக்க தேவர்கள் வேண்டினர். அந்த நாளை சிவ ராத்திரி என்றும் கூறப்படுகிறது. அடிமுடி காணமுடியாமல் நின்ற திருமாலுக்கும் பிரம்மாவுக்கும் லிங்கோற்பவ மூர்த்தி யாக சிவன் காட்சி தந்த தினமும் சிவ ராத்திரி எனக் கருதப்படுகிறது.

**சிவாலய தரிசனம் :**

சிவராத்திரி வைபவங்கள், விழாக்கள் எல்லா சிவ ஸ்தலங்களிலும் மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் கொண் டாடப்படும். சிவனுக்கு தினந்தோறும் அபிஷேக ஆராதனை நடந்தாலும் சிவ ராத்திரி அபிஷேகம் மிகவும் பிரசித்தி பெற்றது. சிவன் அபிஷேகப் பிரியன். இந்த நாளில் செய்யப்படும் அபிஷேகத்துக்கு தனி மகத்துவம் உண்டு. இந்த அபிஷே கத்தை கண்கள் பனிக்க, மெய்சிலிர்க்கக் கண்டு தரிசித்து, அபிஷேக தீர்த்தத்தை அருந்தினால் தீராத நோய்கள் தீரும் என்பது ஆன்றோர், சான்றோர் வாக்காகும். அபிஷேகத்துக்குத் தேவையான பால், தேன், தயிர், சந்தனம், பழங்கள் போன்றவற்றுடன் கரும்புச்சாறு வழங்குவது மிகவும் புண்ணியமாகும். கரும்புச்சாறு தருவதால் தடைகள், தோஷங்கள், உடல் உபாதைகள் நீங்கும் என்பது ஐதீகம்.

சிவராத்திரி விரதம் சற்றுக் கடின மானது. கடந்த காலங்களில் முன் னோர்கள் முறையாக அதைக் கடைப் பிடித்தனர். இந்தக் காலகட்டத்திலும் சிலர் முடிந்தவரை அதைக் கடைப்பிடித்து பின்பற்றுகின்றனர். சிவராத்திரி அன்று சூரிய உதயத்துக்கு முன்பு நீராடி அன்று முழுவதும் உண்ணா நோன்பிருந்து பகல் முழுவதும் சிவபுராணம், சிவ அஷ்டோத் திரம் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். மாலையில் சிவ ஸ்தலங் களுக்குச் சென்று வழிபட வேண்டும். இரவு நான்கு ஜாமங்களில் கலந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். குறிப்பாக இரவு 11.30 மணிக்கு மேல் 1 மணி வரை நடக்கும் பூஜைக்கு லிங்கோற்பவ காலம் என்று சொல்வார்கள். இந்த தரிசனத்தில் கலந்துகொள்வது மிகவும் புண்ணிய மாகக் கருதப்படுகிறது. மௌனம் மிகப் பெரிய பலம். மௌன விரதம் உடலுக்கும், ஆன்மாவுக்கும் உகந்ததாகும். சிவ ராத்திரி அன்று இதைச் செய்வதால் வாக்கு பலிதமும், மந்திர சித்தியும் கூடிவரும் என்பது சித்தர்கள் வாக்கு.

வைணவ சம்பிரதாயத்தில் வைகுண்ட ஏகாதசிக்கு உள்ள பலன்கள் எல்லாம் சைவ வழிபாட்டில் சிவராத்திரிக்கு உண்டு. சிவராத்திரி விரதமும் சிவ தரிசனமும் எமபயம், மரண பயம் போக்கி, முக்திக்கு வழிகோலும் என்பது நாயன் மார்களின் கூற்றாகும். காஞ்சிபுரம், திருவண்ணாமலை, காளஹஸ்தி, சிதம் பரம், திருவானைக்காவல் ஆகிய பஞ்சபூத ஸ்தலங்களிலும் குற்றாலம், திருநெல் வேலி, மதுரை, சிதம்பரம், திருவாலங்காடு ஆகிய பஞ்சரத்ன சபைகளிலும் ஆடல் வல்லானின் தரிசனத்தைக் காண்பது மிகவும் சிறப்பு என்பது மட்டுமன்றி, புண்ணியம் சேர்ப்பதாகும்.

# சிவராத்திரி விரதத்தின் சிறப்பு – வாரியார் விளக்கம்

சிவம் வேறு; அறிவு வேறு அன்று. அறிவே மெய்ப்பொருள். மற்ற எல்லாம் பொய்ப் பொருள்கள் தான். பொய் என்பதற்கு நிலையில்லாதது என்பது பொருள்.

நிலையாக இருப்பவர் கடவுள் மட்டுமே. மற்றவர்கள் எல்லாம் தோன்றி நின்று மொத்தமாக மாய்ந்து விடுபவர்கள்.

சிவ விரதங்கள் 8. அவற்றுள் சிவராத்திரி ஒன்று. இது மாசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியன்று வருவது.

பெப்ரவரி 27 அதிகாலையில் நீராடி திருநீறும் ருத்திராட்ச மாலையும் அணிந்து சிவபூஜை செய்து திருஐந் தெழுத்து ஓதவேண்டும்.

பெப்ரவரி 27 பகல் முழுவதும் உபவாசம் இருக்க வேண்டும். மாலையில் மீண்டும் நீராடி சிவாலயம் சென்று வழிபட வேண்டும். முடியுமானால் நெய்விளக்கு ஏற்றி மலரால் அர்ச்சனை செய்து உள்ளம் உருகி தேவாரம் மற்றும் திருவாசக பாடல்களை பாடி துதி செய்து வலம் வந்து அஷ்டாங்க வணக்கம் புரிந்து வழிபாடு செய்ய வேண்டும்.

பெப்ரவரி 27 அன்று இரவில் நான்கு காலங்களிலும் சிவபூஜை செய்ய வேண்டும். சிவபூஜை செய்ய இயலாதவர்கள் நான்கு காலங்களிலும் கோயிலில் நடைபெறும் பூஜைகளில் கலந்துகொண்டு தரிசிக்க வேண்டும். நிரம்பிய அன்புடன் திருஐந் தெழுத்து ஓதுதல் இன்றியமையாதது.

மறுநாள் பெப்ரவரி 28 காலை நீராடி சிவனை வழிபட்டு விரதத்தை முடிக்க வேண்டும்.

இப்படி விரதம் இருந்தவர்களின் சகல வினைகளும் நெருப்பில் விழுந்த பஞ்சு போல எரிந்து கரிந்து சாம்பலாகும்.

தீபங்களை வரிசையாக வைத்து சிவ பெருமானை வழிபடவேண்டும். சிவபெரு மான் தீபமங்கள ஜோதியாக விளங்கு பவர். அவர் ஒளிவெள்ளமாக திருவண்ணா மலையில் காட்சி தருகிறார்.

கோயிலுக்குள் நீராடிய பிறகே செல்ல வேண்டும். கொடிமரத்திற்கு வெளியே விழுந்து வணங்கி விநாயகரை ஒரு முறையும், சிவபெருமானை மூன்று முறையும் அம்பிகையை நான்கு முறையும் வலம்வர வேண்டும்.

வழிபடும்போது மனம் இறைவன்மீது மட்டுமே இருக்க வேண்டும். விபூதி மற்றும் பிரசாதத்தை பயபக்தியுடன் இரண்டு கைகளாலும் ஏந்திப் பெறவேண்டும். அதைக்கீழே சிந்துவதோ எறிவதோ பெரும் பாவமாகும். சண்டிகேஸ்வரர் மீது நூல் இடக்கூடாது. சிவலிங்கத்திற்கும் நந்தி தேவருக்கும் இடையே போகக்கூடாது. கோயிலில் பிரசாதங்களை சாப்பிட்டுவிட்டு தூண்களில் துடைப்பது தவறாகும். வழிபாடு

முடிந்தபிறகு கொடிமரத்தின் அருகில் வடதிசை நோக்கி அமர்ந்து மூலமந்திரம் ஜெபிக்க வேண்டும்.

அதிக சப்தம் இல்லாமல் இனிமையாக தோத்திரப் பாடல்களைப் பாடவேண்டும். கோயிலுக்குச் செல்வோர் முக்கியமாக விளக்குகளில் எண்ணெய் ஊற்ற வேண்டும். வீட்டுத் தலைவர் ஒரு பாட்லைப் பாட, மற்றவர்கள் அதைத் தொடர்ந்து பாடி இறைவனை வழிபாடு செய்ய வேண்டும். இதனால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன், அந்தவீட்டில் தெய்வ கடாட்சமும் லட்சுமியின் அனுக்ரஹமும் உண்டாகும்.

## ஆசியாவிலேயே முதன்மையான சில விடயங்கள் தமிழ் நாட்டில் உண்டு தெரிந்து கொள்ளுங்கள்

1. தமிழக அரசு முத்திரை கோபுரம் - ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோபுரம்
2. தமிழகத்தின் நுழைவாயில் - தூத்துக்குடி
3. தமிழகத்தின் மான்செஸ்டர் - கோயம்புத்தூர்
4. மக்கள் தொகை அதிகமுள்ள மாவட்டம் - கோயம்புத்தூர்
5. மக்கள் தொகை குறைந்த மாவட்டம் - பெரம்பலூர்
6. மிக உயரமான தேசியக்கொடி மரம் – புனித ஜார்ஜ் கோட்டை (150 அடி)
7. மிகப்பெரிய பாலம் இந்தியாவின் முதல் கடல்வழி பாலம் - பாம்பன் பாலம் (இராமேஸ்வரம்)
8. மிகப்பெரிய தேர் - திருவாரூர் தேர்
9. மிகப்பெரிய அணைக்கட்டு – மேட்டூர் அணை
10. மிகப் பழமையான அணைக்கட்டு – கல்லணை
11. மிகப்பெரிய திரையரங்கு (ஆசியாவில்) தங்கம் (மதுரை – 2563 இருக்கைகள்)
12. மிகப்பெரிய கோயில் - தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில்
13. மிகப்பெரிய கோயில் பிரகாரம் - ராமேஸ்வரம் கோயில் பிரகாரம்
14. மிகப்பெரிய கோபுரம் - ஸ்ரீ ரெங்கநாதர் கோயில் கோபுரம் ( திருச்சி )
15. மிகப்பெரிய தொலைநோக்கி – காவலூர் வைணுபாப்பு ( 700 m)
16. மிக உயர்ந்த சிகரம் - தொட்டபெட்டா [ 2, 636 m (8, 648 ft) ]
17. (உலகின்) மிக நீளமான கடற்கரை – மெரினா கடற்கரை (14 km)
18. மிக நீளமான ஆறு – காவிரி ( 760 km )
19. மக்கள் நெருக்கம் அதிகமுள்ள மாவட்டம் - சென்னை (25937 / $km^2$)
20. மக்கள் நெருக்கம் குறைவாக உள்ள மாவட்டம் - சிவகங்கை ( 286 / $km^2$)
21. மலைவாசல் தலங்களின் ராணி – உதகமண்டலம்
22. கோயில் நகரம் - மதுரை
23. தமிழ்நாட்டின் ஹாலந்து – திண்டுக்கல் ( மலர் உற்பத்தி)
24. (ஆசியாவில்) மிகப்பெரிய பேருந்து நிலையம் - கோயம்பேடு பேருந்து நிலையம்
25. மிகப்பெரிய சிலை – திருவள்ளுவர் சிலை (133 அடி)

# சிவராத்திரியின் மகிமை

சிவராத்திரி என்பது வெறுமனே இரவுப் பொழுதைக் குறிப்பதல்ல. சிவம் என்றால் மங்களகரமானவர் என்று பொருள்படும். ராத்ரம் என்ற சொல் நன்மைகளைக் குறிக்கிறது. திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பார்கள். யார் யாரைக் காப்பாற்றுவது, யார் யாருக்கு அறிவுரை கூறி வழிகாட்டுவது, யார் யாருக்கு அன்பு பாராட்டுவது என்று எல்லோராலும் எல்லோரும் கைவிடப்பட்ட நிலையில், உலக மக்கள் அனைவரும் துன்பத்தில் நலிந் திருக்கும் போது, எல்லோருடைய ஆசை களையும் பூர்த்தி செய்து சந்தோஷத்தை அருள்பவர் சிவபிரான். இதனாலேயே அவருக்குரிய இரவுக்கு சிவராத்திரி என்று பெயர் ஏற்பட்டது.

சிவராத்திரி வகைகள் சிவராத்திரி என்ற உடனேயே நம் அனைவருக்கும் நினைவுக்கு வருவது மாசி மாதத்தில் வருகின்ற சிவராத்திரி விரதமேயாகும். ஆனால் ஒவ்வொரு மாதமும் வருகின்ற கிருஷ்ணபட்ச சதுர்த்தசி நாள் அதாவது தேய்பிறை பதின்னான்காம் நாள் சிவனுக் குரிய இராத்திரி ஆகும்.இவ்வாறு மாத மொரு சிவராத்திரி என்ற வகையில் ஒரு வருடத்தில் பன்னிரு சிவராத்திரிகள் வரு கின்றன. இவை மாத சிவராத்திரிகள் என அழைக்கப்படுகின்றன. அந்நாளில் திரு வாதிரை நட்சத்திரமும் கூடியிருந்தால் அது மிகச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. இம்மாத சிவராத்திரி தினங்களில் குறிப்பிட்ட சில சிவராத்திரி கள் விசேட பலன் தருவன என்பதால் விசேட பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி "மகா சிவராத்திரி" எனப்படுகிறது. அன்றைய தினம் வருடம் முழுவதிலும் மிகவும் கடுமையான காரிருள் சூழ்ந்த இரவுப் பொழுது நிலவும், இந்த இரவு அளப்பரிய மகிமைகள் பல பொருந்தியது என சிவமகாத்மிய நூல்கள் கூறுகின்றன. மகா சிவராத்திரி விரதத்தை அறியாமல் அனுட்டித்தவர்கள் கூட அடியார்க்கு எளியவராகிய எம் பெருமானுடைய அருளைப் பெற்றதாக சிவபுராணம் எடுத்துரைக்கிறது.

புராண ஐதீகங்கள் மகா சிவராத்திரி விரதத்தின் பின்னணியைப் பற்றிப் பல்வேறு புராணக் கதைகள் நிலவுகின்றன. பலரும் அறிந்த பிரபலமான கதை, பிரம்மா, விஷ்ணு ஆகியோருக்குக் கர்வம் தலைக் கேறி, அறிவு மங்கி, அறியாமையால் அவர்கள் அமைதியிழந்தபோது, ஈஸ்வரன் ஆதியந்தமற்ற ஜோதியாகத் தோன்றிய கதையாகும். மேலும் சில புராணக் கதைகளும் உள்ளன.

ஒருநாள் சங்கரருடைய கண்களைப் பார்வதிதேவி விளையாட்டாகத் தன் கரங்களால் மூடினாள். அதன் விளைவாக, புவியெங்கும் அஞ்ஞான இருள் பரவியது. சில கணங்கள் தான் சங்கரருடைய கண்கள் மூடப்பட்டது. இருந்தபோதிலும் உல கெங்கும் ஆத்மாக்களுடைய அகக் கண்கள் மூடப்பட்டு அறியாமை என்ற இருள் கவிந்தது. அதனால் மனிதர்கள்அனைவரும் வாழ்க்கையின் சௌபாக்கியங்களை எல்லாம் இழந்தனர். துன்பங்கள் பெருகின.

அதர்மம் நிறைந்து வழிந்தது. இன்னொரு புறம் மக்கள் இறைவனையும் அவனது கருணையையும் தேடித் திரிந்தனர்.

இந்தக் காட்சியைக் காணச் சகிக்காத பார்வதி தேவி, தாயன்பு கொண்டாள். மனித ஆத்மாக்கள் மீண்டும் இக வாழ்வின் சந்தோஷத்தைப் பெறவேண்டும் என்று இரவு, பகல் பாராமல் சிவபெருமானை உள்ளன்புடன் பூஜித்தாள். எத்தனை பல இரவுகளும் பகல்களும் கழிந்தபோதும் புவியெங்கும் இருள் சூழ்ந்திருந்ததால், அக்காலப் பகுதி இராத்திரி என்றே அழைக்கப்பட்டது. அன்னையின் வழி பாட்டில் மனம் மகிழ்ந்த எம்பெருமான், மீண்டும் சகலரும் பூலோகத்தில் துன்ப மில்லாத சுகவாழ்வு பெற வரமளித்தார் என்பது புராண ஐதீகம். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது கொடூரமான ஆலகால விஷம் தோன்றியது. அதற்கு அஞ்சி, மும்மூர்த்திகள் உட்படத் தேவ, தேவியர் அனைவரும் கருணைக் கடலாகிய சிவபிரானிடம் தஞ்சமடைந் தனர். மனமிரங்கிய எம்பிரான் விஷத்தைத் தானே உட்கொண்டார். அவரது கழுத்திலே தங்கிவிட்ட விஷம் மேலும் பரவாதிருப் பதற்காக தெய்வங்கள் அனைவரும் இரவெல்லாம் விழித்திருந்து இன்பகரமாக ஆடிப்பாடி எம் பெருமாளை மகிழ்வித்தனர். விடிந்ததும் அனைவருக்கும் எல்லை யில்லாத வரங்களை அளித்து இறைவன் ஆசீர்வதித்தார். இச்சம்பவத்தை நினைவு கூரும் முகமாக அன்றைய திதி அபிடேக அர்ச்சனைகளால் இன்றளவும் கொண் டாடப்படுகிறது என்பது இன்னொரு நம்பிக்கை. இப்புராணக் கதைகளுக்கு அப்பால் பலராலும் அறியப்படாத அபூர்வ மான சில உண்மைகள் புதைந்திருக் கின்றன.

இரவின் இரகசியம் நிலவின் ஒளி தேய்ந்து காரிருள் படர்ந்த மாசி மாதத்துத் தேய்பிறை பதினான்காம் நாள் இரவு எல்லாம்வல்ல பரம்பொருளாகிய சிவ பெருமானுக்கு உரியதாகி இருக்கிறது. நவீன பொழுதுபோக்கு வசதிகள், வெகு ஜனத் தொடர்பாடல் கருவிகள் எதுவும் வளர்ச்சியடைந்திருக்காத பண்டைய காலத்தில் பௌர்ணமி நாட்களே இரவு நேர நடமாட்டத்திற்கும் கேளிக்கை களுக்கும் தெரிவு செய்யப்பட்டன. நிலவொளியற்ற இரவுகளில் வெகு விரைவிலேயே ஊரடங்கிவிடும்.

அக்காலப்பகுதியில் இருள் என்பது அக்கிரமங்களுக்குத் துணை போகும் முக்கிய காரணியாக இருந்தது. குறிப்பாக அமாவாசைத் தினங்கள் அதர்மச் செயல் களுக்குப் பேர் போனவையாகக் கருதப் பட்டன. பகலெல்லாம் உழைத்துக் களைத் தவர்கள், அலுத்துச் சோர்ந்து ஆழ்ந்து உறங்கும் நள்ளிரவு வேளை, அதர்மம் அதிகாரத்துடன் தலைவிரித்தாடும் நேர மாக இருந்தது. இத்தகைய பயங்கரமான பொழுதை நமது புராணங்கள், அன்பேயுருவான சிவபெருமானுக்கு அர்ப் பணித்திருப்பதன் நோக்கம் சாதாரண மானதல்ல. அறியாமை என்ற அக இருளால் தர்மம் நிலைகுலையும்போது, புற வாழ்வில் துயரமும் அழிவும் இருள் போலச் சூழ்கிறது. அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டி அக இருள் போக்கக் கூடியவர் பரம்பொருள் ஒருவரே யாவார். நமது அவலக் குரலுக்குச் செவி சாய்த்து துன்பத்தை நீக்கி சந்தோஷத்தை

ஏற்படுத்திவிட்டு மறைபவர் இனியவராகிய சிவபிரான். இவ்வகையில் அநியாயங்களின் அதி தீவிரதத்தைக் குறிக்கும் அமாவாசை இரவு, நன்மை பயப்பவராகிய சிவபிரானுக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதன் இரகசியம் இதுவேயாகும். சிவ மகிமையும் எளிமையும் "சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை. அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை" என்பது திருமந்திரம்.

சைவசமயத்தவர்களுக்கு சிவபெருமானே முழுமுதற் கடவுள். அவரைவிட மேலானது என்று ஒன்றிருக்க முடியாது என்பதால் இறைவன் ஒருவனே என்று சைவ சமயம் கூறுகிறது.

நமது நாயன்மார்களும் சிவனடியார்களும் அவருடைய துணையையும் தமது இல்வாழ்விலேயே அனுபவித்திருக்கிறார்கள். அன்புக் கடலாகிய சிவபகவானை, தனது உறவாக குடும்பத்தில் ஒருவராக ஆசை தீர அனுபவித்தவர்கள் அவர்கள். அதன்பின், நன்றி பொங்கும் அன்புடன், அவரைப் பலவிதமாகப் போற்றியிருக்கிறார்கள். இன்று நாம் அவற்றைப் பாடல்களாகவும் பதிகங்களாகவும் ஓதிக் கொண்டிருக்கிறோம்.

மட்டற்ற எளிமையுடையவராகிய சிவன் நாயன்மார்களுக்கு மட்டும் உரியவரல்ல. அதிவேகமான ஒரு உலகத்தில் தன்னை மறந்து ஓடிக்கொண்டிருக்கும் நமக்கும் சொந்தமானவர். நம் வாழ்விலும் அசாத்தியமானவற்றைச் சாத்தியமாகச் செய்து பல அற்புதங்களைப் புரியக்கூடியவர். இதற்காக தூய்மைக் கடலாகிய சிவன், அக அழுக்குகள் நிறைந்த கலியுக இறுதியில் பூவுலகில் அவதரிக்கிறார். மென்மையாக நம்மைத் தடுத்தாட்கொண்டு நம் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துகிறார். இந்த சிவ அவதாரமே நம்மைச் சிவதரிசனம் பெறச் செய்கிறது. அதன்பின் வாழ்க்கையில் நம்பமுடியாத நல்ல மாற்றங்கள் பல ஏற்படுகின்றன. சிவபெருமான் பூமியில் அவதரித்துத் தன் திருவிளையாடல்களைப் புரியும் விதம் மிகவும் அபூர்வமானது.

சிவ அவதாரம், பிறப்பு, இறப்புக்கு அப்பாற்பட்ட அவர், பூவுலகில் தாய் வயிற்றில் தோன்றித் தனக்கென ஒரு சரீர உருவம் தாங்காதவர். இருப்பினும் ஜீவாத்மாக்களுடைய நலன் கருதி பூவுலகத்தில் அவதரித்து, பிரம்மா, விஷ்ணு, சங்கரர் மூலம் முத்தொழில்களையும் ஆற்றுகிறார். அதனால் அவர் திருமூர்த்தி சிவன் எனப்படுகிறார்.

நாமும் வாழ்வில் முத்தொழில்களையும் ஆற்றுகிறோம். சிறந்த முறையில் படைத்தல், காத்தல், அழித்தலைச் செய்கின்றவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள்.

இங்கே படைத்தல் என்னும் செயற்பாடு நமக்குள்ளே ஆழத்தில் புதைந்திருக்கும் இயல்பான குணங்களாகிய அன்பு, தூய்மை, சந்தோஷம், அமைதி, ஞானம் என்பனவற்றை வெளித்தோன்றச் செய்வதாம். அழித்தல் என்பது தன்னைப் பற்றிய தவறான புரிந்துணர்வால் ஏற்பட்ட காமம், கோபம், ஆசை, அகங்காரம், பற்று ஆகியவற்றை அடியோடு அழிப்பதாகும். படைக்கப்பட்ட நற்குணங்களை அவதானமாகப்

பேணிப் பராமரிப்பது காத்தல் செயற்பாடு ஆகும்.

சிவபிரான் அருளிய பிரம்ம ஞானம் இத்தகைய மகத்துவம் மிக்க ஞானம் சிவபிரானால் நேரடியாக பிரம்மனுக்குப் போதிக்கப்பட்டதாகும். மேலும் இது தேவாம்சம் பொருந்திய இராஜாக்களுக் கெல்லாம் இராஜாவாக சாதாரண மனிதனுடைய சுபாவத்தை மாற்றக்கூடிய வல்லமை பொருந்திய ஞானமாகும். மேலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அரசராகிய சிவபகவானுடன் சாதாரண மனிதருக்கும் நேரடியான ஒரு தொடர்பை ஏற்படுத்தித் தரவல்ல ஞானம் சிவபிரா னுடைய அவதார மகிமையை உள்ளவாறு எடுத்துரைக்கும் ஞானத்தைப் பெற்று மனதை ஒருமுகப்படுத்தி சிவன் நினைவில் இலயிப்பது மகா சிவராத்திரி விரதிகளின் கடமையாகும். சிவபெருமான் எப்போது எவ்வாறு பிரம்ம ஞானத்தைப் போதித்தார் என்பது பலர் அறியாத இரகசியமாகும்.

பிரம்மாவின் பகல் கழிந்து பிரம்மாவின் இரவு தோன்றியதும் படைத்தல் கருவி யாகிய பிரம்ம தேவர் உறக்கத்தில் ஆழ்ந்தார். அவரது விழி மூடியதும் பூவுலகெங்கும் இருள் பரவியது.

இயற்கையின் சமநிலை அறுந்தது. பஞ்ச பூதங்கள் மனிதக் கட்டுப்பாட்டிலிருந்து விலகின. பூமியெங்கும் பூகம்பங்கள், எரிமலைகள், கட்டுங்கடங்காத மழை, வெள்ளப்பெருக்கு, கடல் கொள்ளல், சூறாவளிகள் என்பன ஏற்பட ஆரம்பித்தன. தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், சடப்பொருட்கள் அனைத்தும் அழிவை நோக்கிச் சென்றன. இப்பிரளயத்தில் படிப்படியாக பூலோகம் முழுவதுமே உயிர் வாழ்க்கையின்றி அழிந்து கொண்டிருந்தது. இது ஊழிக் காலத்தை நெருங்கியது.

இவ்வாறு எத்தனையோ இரவு, பகலாக பிரம்மாவின் இரவு துன்பகரமாகக் கழிந்துகொண்டிருந்தபோது, இறைவன் பிரம்ம தேவருக்கும் தன் படைப்புக்கும் ஞானோபதேசம் செய்யத் திருவுள்ளம் கொண்டார். அதன் நிமித்தம், ஆத்மாக் களின் வீடாகிய பரந்தாமத்திற்கும் பூலோ கத்துக்கும் இடையில் முழுநிலை அடைந்த பிரம்மன் உட்பட ஒளி பொருந்திய தூய சரீரம் தாங்கிய மும்மூர்த்திகளைப் படைத்தார். அதன்பின் தானே ஜோதி வடிவாக பூமியில் அவதரித்து முழுநிலை அடையாத பிரம்ம தேவருக்கும் பிரம்ம ஞானத்தைப் போதித்தார். இவ்வாறு பரமாத்மா சிவன் பூமியில் தோன்றிய நாளே சிவஜெயந்தி அல்லது சிவ அவதார நாளாகும். இதுவே இலிங்கோற்பவ காலம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஞானம் பெற்ற பிரம்மனுக்கு மூன்றாவது கண் விழித்தது. உண்மை புரிந்தது. இருள் நீங்கி ஒளி தெரிந்தது. இந்த ஞானத்தைப் பூமியில் வாழ்ந்த ஏனைய ஜீவாத்மாக்க ளுக்கும் போதிப்பதற்கு ஜோதி வடிவாகிய பரமனுக்கு ஒரு சரீரம் தேவைப்பட்டது. பரம்பொருளோ பிறப்புக்கும் இறப்புக்கும் அப்பாற்பட்டவர். அதனால், பிரம்ம தேவ ருடைய ஸ்தூல சரீரத்தைப் பயன்படுத்தி பிரம்மாவின் கமலவாய் மூலம் அனை வருக்கும் ஆத்ம ஞானத்தைப் போதித்தார்.

ஞானம் பெற்ற ஆத்மாக்கள் அனை வரும் மானசீகமாக மறுபிறப்பு எடுத்தனர்.

ஈஸ்வரனால் பிரம்மனுடைய கமலவாய் மூலம் உண்மையை உணர்த்தப்பட்டதால் அவர்கள் பிரம்மாவின் வாய்வழித் தோன்றல்கள் ஆகினர்.

ஞானம் பெற்று பழைய சரீரத்தில் புதிய வாழ்வை அடைந்த பாக்கியசாலி ஆத்மாக்கள், தேவர்களைக் காட்டிலும் அதிமேலான குலத்தைச் சேர்ந்தவர் களாக அறியப்பட்டனர். அவர்கள் ஞானத் தெளிவால் தமது வாழ்வைப் புனித மாக்கிக் கொண்டு இராஜரிஷிகளாகப் பூமியில் சிவன் நினைவில் தவம் புரிந்தனர். பிரம்மனுடன் இணைந்து அவர்கள் தவமியற்றிய காலப்பகுதி நள்ளிரவைத் தொடர்ந்து வருகின்ற அதிகாலையில் இருள் சூழ்ந்த நேரமாகும். இதுவே பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது.

அமிர்த வேளை எனப்படும் பிரம்ம முகூர்த்தம் கழிந்ததும் யோக சக்தியின் பலனாக பிரம்மாவின் இரவு முடிந்து பிரம்மாவின் பகல் ஆரம்பமாகியது. புவியெங்கும் புதுயுகம் மலர்ந்தது. பூமியின் பொற்காலமாகிய சத்தியயுகம் பிறந்தது.

தன் அவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்த சிவபெருமான் பிரம்ம முகூர்த்தம் கழிந்து, பிரம்மாவின் பகல் ஆரம்பமாகும் வேளையில் மீண்டும் முக்தி தாமமாகிய பரந்தாமத்திற்குத் திரும்பினார். மனி தர்கள் தேவர்களைப் போல், அதீத இன்பத்தில் திளைத்து வாழும் சுவர்க்க லோகம் பூமியில் ஆரம்பமாகியது. பிரம்ம தேவருடன் இணைந்து சிவனை நோக்கித் தவமியற்றிய இராஜ ரிஷிகள், தமது பூர்வஜென்மம் புண்ணிய பலனால் நிலை யான செல்வத்தையும் நீங்காத சந்தோ ஷத்தையும் நீடித்த ஆரோக்கியத்தையும் பெற்றுக்கொண்டு தேவலோகமாகத் திகழ்ந்த பூமியில் தேவர்களாகப் பிறந்து எல்லையில்லாத நிரந்தர மகிழ்ச்சியில் திளைத்தனர். சிவ வழிபாடு ஸ்ரீ கிருஷ்ணர் கோபேஸ்வரத்திலும் ஸ்ரீ ராமர் இரா மேஸ்வரத்திலும் சிவலிங்க பூஜை செய்த தாக அத்தலங்களைப் பற்றிய புராணக் கதைகள் குறிப்பிடுகின்றன. தெய்வங் களாகக் கருதப்படும் கிருஷ்ணரும் இராமரும் சரீர உணர்வை மறந்து பணி வன்புடனும் ஆன்ம உணர்வுடனும் மன மொன்றிப் பூஜை செய்து சிவார்ச் சனையின் பலனாகக் காரிய சித்தி பெற்றனர்.

பக்திபூர்வமான உண்மையான அன்புடன் ஆற்றப்படும் போதே எந்த ஒரு விரதத்திலோ அல்லது பூஜையிலோ முழுமையான பலனைப் பெற்றுக் கொள் ளலாம். ஏனெனில் மனதில் எழும் நினைவுகளே வார்த்தைகளாகவும் செயல் களாகவும் வடிவம் பெறுகின்றன. எண் ணங்களே மூல விதையாகின்றன. தரமான விதையே பலன் தரும்.

மூன்று மணிநேரம் ஒரு ஜாமம் எனப்படுகிறது. முதல் ஜாமம் மாலை ஆறுமணிக்கு ஆரம்பமாகின்றது. மகா சிவராத்திரி அன்று முதலாம் ஜாமம் பஞ்ச கவ்வியத்தால் அபிடேகம் செய்து செம் பட்டாடை அணிவித்து பாலன்னம் நிவே தித்து சந்தனத் தூபமிட்டு விசேட பூஜை யாக ஸ்பனாபிஷேகம் செய்து சிவார்ச் சனையும் வழிபாடும் செய்ய வேண்டும்.

இரவு ஒன்பது மணிக்கு வரும் இரண்டாம் ஜாமப் பூஜையின்போது

பஞ்சாமிர்தத்தால் அபிடேகம் செய்து மஞ்சள் பட்டாடை அணிவித்து பாயா சான்னம் படைத்து, அகிற் சந்தனக் கந்தத்துடன் நட்சத்திரத் தீபாராதனை செய்து வழிபட வேண்டும்.

மூன்றாம் ஜாமப் பூசையின்போது பலோதக அபிடேகம் செய்து வெண்பட்டு வஸ்திரம் அணிவித்து எள்ளோதன நைவேத்தியத்துடனும் கஸ்தூரி சேர்த்து சந்தனக் கந்தத்துடனும் கருங்குங்குலியத் தூபமிட்டு ஐந்து முகத் தீபாராதனை செய்ய வேண்டும். நான்காம் ஜாமம் கந்தோதக அபிடேகத்தின் பின் நீலப் பட்டுடுத்தி சுத்தான்னம் படைத்து புனுகு சேர்ந்த சந்தனக் கந்தத்துடன் லவங்கத் தூபமிட்டு வில்வ தீபம் காட்டி வழிபாடு செய்ய வேண்டும்.

வழிபாட்டின் போது உடல் அங்கங்களால் ஆற்றவேண்டியவற்றை முறை தவறாது செய்து முடித்தாலும் ஆத்மாவின் அங்கமாகிய மனம், காதலாகிக் கசிந்து இனிமையான இறைவனின் நினைவிலே ஊறித் திளைத்திருப்பதே அதி முக்கிய மானது. ஏனெனில், அதுவே நமது விரதத்தின் அல்லது பூஜையின் பிரதானமான பலனைப் பெற்றுத் தருவதாகும்.

இதனை மனதில் கொண்டு சிவந்த பொன்னிறமுடைய ஒளிப்பொட்டாகிய சிவத்தை நமது உயிராகவும் உறவாகவும் ஆக்கி, இன்றிலிருந்தே மனம் முழுவதும் அன்பை நிறைத்து எதிர்வரும் சிவராத்திரி தினத்துக்காகக் காத்திருப்போம். அன்றைய தினம் அனைவருடைய வாழ்விலும் அபரிதமான நிறைவு ஏற்படும் வகையில், இந்த விழிப்புணர்வை சைவ சமயிகளிடத்து ஏற்படுத்துவோமாக.

## உங்களை நம்புங்கள்!

இளைஞர்களே! உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால், என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது. வலிமையே மகிழ்ச்சிகரமான – நிரந்தரமான – வளமான – அமரத்துவமான வாழ்க்கை. சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள். என் குழந்தைகளான நீங்கள் என்னைவிட நூறு மடங்கு சிறந்தவர்களாக இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் எதை நினைக்கிறீர்களோ அதுவாகவே ஆகிறீர்கள். உங்களை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவீர்கள்.



– சுவாமி விவேகானந்தர்

உ

# கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

# கந்தபுராணம்

## மூலமும் பொழிப்புரையும்

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

### 1. பாயிரம்

### காப்பு

#### விநாயகக் கடவுள்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

விளங்கா நின்ற பத்துத் திருக்கரங்களும் ஐந்து திருமுகங்கள் உள்ளவருமாகிய சிவபெருமானது தேருக்குச் சில்லாக நின்ற தாமரைக்குத் தலைவனாகிய சூரியனை வயிற்றினிடமாக இரத்தினமாக அணியப் பெற்ற விகட சக்கர விநாயகரது மெய்ம்மையாகிய திருவடிகளை யாம் வணங்குவாம்.

#### வேறு

உச்சியின் மகுட மின்ன வெளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்கர கணபதிக் கன்பு செய்வாம்.

சிரசிற் கிரீடம் பிரகாசிக்கவும் நெற்றியிற் பட்டம் பரிமளிக்கவும் வைரித்த ஒன்றைக் கொம்பில் இரத்தினம் அழுத்தப் பெற்ற கிம்புரி விளங்கவும் உண்மையை உணரும் காதுகளாகிய சாமரங்கள் தூங்கவும் பெருமை மிக்க யானை முகத்தைக் கொண்டு காஞ்சிபுரத்தில் எழுந்தருளிய விகட சக்கர விநாயகரிடத்து அன்பு செலுத்துவோம்.

#### சுப்பிரமணியக் கடவுள்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

காஞ்சி நகரத்திலுள்ள மாமர நீழலில் எழுந்தருளி இருக்கும் முருகக் கடவுளுடைய ஆறு திருவதனங்களும் துதிக்கப்படுவன. திருமுகங்கள் பொழிகின்ற கருணை வெள்ளம் காப்பதாக. எல்லோரும் ஏத்தும்படி எழில்பெற விளங்கும் ஈராறு கரங்களும் நம்மைக் காப்பதாக. தாமரை மலர்கள் போன்ற திருவடிகளுக்கு வணக்கம். முருகமூர்த்தியினுடைய கோழிக் கொடியும் மயில் வாகனமும் வணக்கத்துக்கு உரியன. திருக்கரத்தில் பொலிகின்ற வெற்றி வேலும் வாழ்த்தப்படுவதாக.

## நூற்பயன்

**இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்**
**சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்**
**அந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்**
**கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.**

முடிவில்லாத அசுரர்களது வல்லமை இல்லையாம்படி கோபித்தழித்த செவ்வேல் ஆயுதத்தைத் தாங்கிய கந்தசுவாமியினுடைய புகழை விருப்புடன் படிப்பவர்கள் இந்திர செல்வம் அடையப் பெற்று இப்பூவுலக சுவானுபத்தைப் பெற்று நல்வாழ்வில் சிறந்த மனத்தில் நினைந்த காரியங்கள் நிறைவேறப் பெற்றுத் தேகாந்தத்தில் சிவபதம் சேர்வர்.

## வாழ்த்து

**வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்**
**கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க**
**நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.**

நிலவுலகம் எங்கும் வான்முகில்கள் தவறாது மழை பெய்க. நிறைந்த செல்வம் செழிக்க. மன்னவன் செங்கோல் முறை செய்க. சீவான்மாக்கள் நிறைவான வாழ்வைப் பெறுக. நான்கு வேதங்கள் மேற்கொள்ளும் தருமநெறி தழைத்து ஓங்குக. மேன்மையை மேற்கொள்ளும் சைவ சமய அனுட்டானம் நிலை நிற்க.

*பாயிரம் முற்றிற்று*

ஆகத் திருவிருத்தம் – 5

## 2. கடவுள் வாழ்த்து

### சிவபெருமான்

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
அருவந் தனையு முருவத்தையு மன்றி நின்றான்
ஒருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம்.

சிறப்புமிக்க பழைய இப்புவனத்தாரும் தேவர்களும் துதித்தும் பெரிய வழிபாட்டைச் செய்தும் உணர்வதற்கரிய உண்மையை உள்வைத்து அருவத் தன்மையையும் உருவத் தன்மையையும் விலகி விளங்கிய ஒப்பற்ற சிவபெருமானது திருவடிகளை உள்ளத்தில் உணர்வோமாக. (1)

ஊனாகி யூனு ளுயிராயுயிர் தோறு மாகி
வானாதி யான பொருளாய்மதி யாகி வெய்யோன்
தானாகி யாண்பெண் ணுருவாகிச் சராசரங்கள்
ஆனான் சிவன்மற் றவனீள்கழற் கன்பு செய்வாம்.

உடலாகி உடலினுள் உயிராகி உயிர்தோறும் வியாபித்திருக்கின்ற பரமான்மாவாகி ஆகாயம் முதலாகிய பூதங்கள் ஐந்தும் ஆகி சந்திரனுமாகி சூரியனுமாகி ஆண் வடிவமும் பெண் வடிவவுமாகி இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளுமானவர் சிவபெருமானாதலால் அப்பெருமானுடைய நீண்ட திருப்பாதங்களிடத்தில் அன்பு செய்வோம். (2)

### வேறு

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையும்
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

பிறத்தலும் இறத்தலும் பெயரும் தொழிலும் மறத்தலும் நினைத்தலும் வடிவமும் யாவையும் துறப்பதும் இவை போன்ற உயிர்க்குரிய குணங்கள் பிறவுஞ் சேரப் பெறாத மகிமையுடைய சிவபெருமானுடைய திருப்பாதங்களைச் சிரமேற் தரிப்போம். (3)

பூமலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம்.

செந்தாமரை மலராசனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவர் முதலிய வேதர்களும் அறிதற்கு அரிய முதன்மையைப் பொருந்தி பெருமை பொருந்திய பிரணவத்தினது ஒப்பற்ற வடிவமாய் நின்ற சிவபெருமானுடைய அழகு மிக்க சிவந்த தாமரைமலர் போன்ற பாதார விந்தங்களைப் பரவுவோம். (4)

**பங்கயன் முகுந்தனாம் பரமென் றுன்னியே**
**தங்களி லிருவரும் சமர்செய் துற்றுழி**
**அங்கவர் வெருவர வங்கி யாயெழு**
**புங்கவன் மலரடி போற்றி செய்குவாம்.**

தாமரை மலராசனத் திலமர்கின்ற பிரமதேவரும் திருமாலும் நாங்களே பரப்பிரமம் என்று நினைந்து இருவரும் தங்களில் போரிட்டு நின்றபொழுதில் அவர்கள் இருவரும் அஞ்சும்படியாக அக்கினி மலையாய்த் தோன்றி நின்ற தலைவராகிய சிவபெருமானுடைய தாமரைமலர் போலும் திருப்பாதங்களைப் போற்றுதல் புரிவோம். (5)

**காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்**
**மாண்புடை யோனுமாய் வலிகொள் வான்றொடர்**
**பூண்பதின் றாய்நயம் புணர்க்கும் புங்கவன்**
**சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம்.**

காண்பான் முதலிய மூவகைப் பொருளும் காட்டுவானும் ஆகி வலிமை மிக்க பெரிய பாசத்தளையைப் பூணுதலின்றி ஆன்மாக்களுக்கு நன்மையைச் செய்யும் தலைவராகிய சிவபெருமானுடைய சிதாகாசமாகிய கனகசபை பொலிவு பெறும்படி திருநடனச் செயலைச் சேவிப்போம். (6)

## உமாதேவியார்

**செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய**
**மறுவறு மரனிட மரபின் மேவியே**
**அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய**
**இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.**

ஆன்மாக்கள் தோறும் விளங்கி வியாபித்த குற்றமில்லாத சிவபெருமானுடைய இடப்பாகத்தில் முறைப்பிரகாரமாக வீற்றிருந்து ஆறு வகைப்பட்ட உட்சமயங்களையும் பிற சமயங்களையும் தோற்றுவித்த தலைவியாகிய உமாதேவியாருடைய தாமரை மலர் போன்ற இணையடிகளை ஏத்தி வாழ்த்துவோம்.

## விநாயகக் கடவுள்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

பூவுலகில் எடுக்கும் பிறவியாகிய குற்றம் தீரவும் மனசிட்ட சித்திகள் ஈடேறவும் நெற்றிக் கண்ணுடைய வேழமுகத்து விநாயகப் பெருமானுடைய தாள் தாமரைகளை அன்புடன் ஆராதனை செய்வோம்.

– *வளரும்*


## ஞானியார் சுவாமிகளின் பொன் மொழிகள்

- அன்பும் அருளும் அறிவிற்கு அடையாளம். அறிவுள்ளவன் அன்பும் அருளும் உடையவன். சிற்றறிவு உடையது உயிர். பேரறிவு உடையது கடவுள். அன்பை வளர்க்க அறிவு வளரும். அறிவு வளரக் கடவுளை நெருங்குவோம்.

- அறிவு வளர வளர இன்பம். ஆசை வளர வளர துன்பம். இன்பத்தை வளர்க்க வேண்டுபவன் அறிவை வெளியே பொறிகள் வழியே செலுத்தாமல், உள்ளே இருக்கும் கடவுளிடத்துச் செலுத்துதல் வேண்டும்.

தொகுப்பு – சித்தாந்தம்
1982 – பக்கம் 137

# முல்லை மாவட்டம் ஒதியமலைக் கிராமத்தில் இந்து சமய நிறுவனம் சுவாமி இராமதாஸ் அறக்கட்டளை 39 வீடுகளை போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிர்மாணித்து வழங்கினர். 06-02-2014




ஒதியமலையிலுள்ள பழமைமிக்க விநாயகர் கோவில்
(போரினால் பாதிக்கப்பட்டுள்ளது)




ஒதியமலையில் ஸ்ரீ காமாட்க்ஷி நகர் திறந்து வைப்பு




விருந்தினர்கள் அழைத்துவரப்படுகிறார்கள்.





ஒதியமலை வீட்டுத்திட்டம் ( சுவாமி இராமதாஸ் அறக்கட்டளையின் நிர்மாணிப்பு )



சுவாமிகள் இல்லத்தைத் திறந்துவைக்கிறார்.




கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் இல்லத்தைதத் திறந்து வைக்கிறார்.







இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் உரை




கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் உரை



வீட்டின் தோற்றம்



கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் முதல்வர் பயனாளிகளுடன்....



# "சிவதீட்சையின் அவசியமும் பயனும்"

'சைவசித்தாந்த சரபம்'
சிவஸ்ரீ தத்புருஷதேசிகர் அவர்கள்
*தேவகோட்டை.*

நிலவுலகத்திலுள்ள கடவுட் கொள்கை யுடைய எல்லாச் சமயங்களும் கடவுளை அடைவதனாலேயே உயிர்கள் பேரின் பத்தைப் பெறுகின்றனவென்றும், அப் பேற்றிற்குரிய நெறிமுறைகள் இவையிவை என்றும், தத்தம் தகுதிகளுக்கேற்ப வெவ் வேறு வகைகளில் கூறுகின்றன. கடவு ளுண்மை, உயிருண்மை, உயிர்கள் கடவுளை யடைவதற்குத் தடையாயிருக்கின்ற மல வுண்மை, அவற்றின் இயல்பு ஆகியவற்றை அளவை இயைபுடன் புலப்படுத்தி, உயிர்களின் உண்மையான வீடுபேற்றை உணர்த்துவது சித்தாந்த சைவ சமயம் ஒன்றேயாகும்.

கடவுள் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். அதனாலேயே அவர் பாச பந்தத்தால் உழலும் உயிர்களை உய்திக்குக் கொண்டுவரும் தகுதியுடையவராயிருக் கிறார். உயிர்கள், அனாதி காலத்திலிருந்தே பாசபந்தங்களை உடையவைகளாகி, அதனால் அறியாமை, பிறப்பிறப்பின் பாற்படுதல், இன்ப துன்ப நுகர்ச்சி, முதலியவைகளை அடைகின்றன. கடவுள் உயிர்களுக்கு வரும் கேடுகளை நீக்குவது, அவர் பயன் கருதியதன்று, அவரது பேரரு ளுடைமையே உயிர்களின் கேடு நீக்கத் துக்குக் காரணமாயிருக்கின்றது.

முதற் பெருங்கடவுளாகிய சிவபெரு மான், உயிர்களைப் பிறவிப் பெருங்கடலி லிருந்து, கரையேற்றிப் பேரின்ப வாழ்வில் நிலைநிறுத்துதற்குச் செய்யும் ஒரேயொரு அருளிப்பாடு சிவதீட்சையாகும். தீட்சை பெறுவதற்குரிய பக்குவம் உண்டா வதற்காக இறைவன் உயிர்களுக்குச் செய்யும் உதவி, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கு தொழில்களின் வழியாக நிகழும். அவர் செய்யும் இறுதித் தொழிலாகிய அரு ளலைத் 'தீட்சானுக்கிரகம்' என்று ஞான நூல்கள் கூறுகின்றன. படைத்தல் முதலிய நான்கு தொழில்களும், அருளலுக்கு ஆதாரமாவே நிகழுகின்றவாதலின் அவற்றையும் அருளின் பாற்படுத்துதல் ஆன்றோர் திருவுள்ளக் குறிப்பாகும்.

படைத்தல் என்பது உயிர்களை உலக போகத்தில் இயைவதற்கு வசதியாக உடம்பையும் மனம் முதலிய உட்கருவி களையும் உலகத்தையும் நுகர்ச்சிப் பொருள்களையும் தோன்றச் செய்தல். காத்தல் என்பது அங்ஙனம் தோன்றிய தனு, கரண, புவன, போகங்களில் உயிர்கள் உரிய காலம் வரை நிலைநிற்கும்படி செய்தல். அழித்தல் என்பது படைப்பில் தோன்றியவைகளை ஒடுங்க வைத்தல், மறைத்தல் என்பது உயிர்களை அவ்வ வற்றின் கன்மங்களுக்கேற்பப் போக நுகர்ச்சியில் நிறுத்துல். அருளல் என்பது தீட்சா கிருத்தியமாகிய அனுக்கிரகம்.

உயிர்கள் ஓரறிவுடைய தாவரப் பிறப்பிலிருந்து படிப்படியாக மேலேறி ஆறறிவுடைய மனிதப் பிறப்பையடையும். மனிதரும் முதற்கண் கடவுட் கொள்கை யில்லாத நாத்திகராகவே வாழுவர். பின்னர், தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிப் புறப்புறச் சமயங்களாகிய

சமணம், பௌத்தம் முதலியவற்றிலும் புறச்சமயங்களாகிய ஏகான்மவாதம், பாஞ்சராத்ரம் முதலியவற்றிலும், அகப்புறச் சமயங்களாகிய பாசுபதம், ஐக்கியவாதம் முதலியவற்றிலும், அகச் சமயங்களாகிய பாடாணவாத சைவம், சிவத்துவிதசைவம் முதலியவற்றிலும் நின்று அவ்வச் சமயங் களில் விதித்தபடி ஒழுகுவார்கள்.

புறப்புறச் சமயத்தார் வேதசிவாக மங்களை நிந்திக்கும் நாத்திகராயினும் தமக்கென நூலும் பிரமாணமும்கொண்டு நிற்பர். புறச்சமயத்தார் வேதத்தைப் பிரமாணமென்று பொதுவகையால் ஏற்றுக் கொண்டு வேதத்தில் தத்தம் கருத்துக் களுக்குப் பொருந்துவனவற்றை மட்டும் கைக்கொள்ளுபவரும், வேதத்துக்குப் பொருள் கொள்ளுதலில் மாறுபாடுடைய வரும், வேதப் புறமாகிய நூல்களையும் பிரமாணமாகக் கொள்ளுபவரும், சிவாகம நிந்தகரும் ஆவர். இனி, அகப்புறச் சமயத்தார் வேத சிவாகமங்களைப் பொது வகையால் பிரமாணமாகக் கொண்டு சிறப்பு வகையால் அவற்றிற்குப் புறமாகிய பாசுபதம் முதலிய நூல்களைப் பிரமாணமாகக் கொள்ளுப வரும் வேத சிவாகமங்களில் விலக்கப்பட்ட வற்றைக் கைக் கொள்ளுபவரும் ஆணவ மலத்தின் உண்மையை மறுப்பவரும் ஆவர். அகச் சமயத்தார் சித்தாந்த சைவரோ டொப்பப் பொருளுண்மையை ஏற்பாரா யினும் அவற்றின் பொது இயல்பு, சிறப் பியல்புகளில் முரணி நிற்பர்.

உயிர்கள் முதலில் பசு புண்ணியங் களைச் செய்து சுவர்க்க போகம் முதலிய வற்றை அனுபவித்து, அப்புண்ணிய மிகுதியால் சித்தாந்த சைவ நெறியைக் கடைப்பிடிக்கும் பேற்றைப் பெறுகின்றன. சைவத்தில் தவநெறியைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என வரிசைப் படுத்தி ஞான நூல்கள் கூறும். இவற்றில் யோகத்தின் முடிவில் கிடைக்கும் ஞானமே பரமுத்தியை நல்குவது. சைவசித்தாந்த நெறியிலன்றிப் பரமுத்தி சித்திக்காது.

சரியை என்பது சிவாலயத்துக்கும் சிவனடியார்களுக்கும் ஆசார்யருக்கும் தொண்டு செய்தல். கிரியை என்பது சிவலிங்கப் பெருமானை அகத்தும், புறத்தும் பூசித்தல். யோகம் என்பது மனத்தை விடயங்களின் வழியே செல்லா வண்ணம் நிறுத்திச் சிவத்தைத் தியா னித்துத் தியானிப்போனாகிய தானும், தியானமும், தோன்றாது, தியானப் பொரு ளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுதல். ஞானம் என்பது பதி, பசு, பாசமாகிய முப்பொருள்களின் இலக்கணங்களை உணர்த்தும் ஞானநூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடி அதனால் வரும் சிவஞானத்தைப் பெற்றுப் பேரின் பத்தையடைதல். இவை நான்கும் முறையே ஒன்றுக்கொன்று காரணமாயிருந்து அரும்பு, மலர், காய், கனியையொப்பன. சரியை, கிரியை, யோகம் ஆகிய மூவகைத் தவத்துக்கும் பயன்களாகக் கிடைப்பன. சிவலோகத்தில் வாழும் சாலோகம், சிவபெருமானுக்கு அருகில் வாழும் சாமீபம், சிவபெருமானது உருவத்தைப் பெறும் சாரூபம் என்பன வாம். இறுதிக் கண்ணதாகிய ஞானமே மீண்டு வாரா நெறியாகிய பேரின்பத்தை வழங்கும். அதனால் முன்னைய மூன்றையும் "பதமுத்தி" என்றும் பின்னையதைப் "பரமுத்தி" என்றும் ஆன்றோர் கூறுவர்.

கடவுள் இயல்பாகவே பாசங்களின் நீங்கிய முத்தராதலால் அவருக்கு முத்திப்பேறு வேண்டுவதில்லை. மலங்கள்

அறிவற்றவையாதலால் அவைகளுக்கும் முத்தியின்பம் வேண்டப்படமாட்டாது. சத்தாகிய சிவத்துக்கும் அசத்தாகிய பாசத்துக்கும் இடைப்பட்டுச் சிற்றறிவுடையனவாயிருக்கும் உயிர்களே பாசத்திலிருந்து விடுபட்டு முத்தியைப் பெறும் உரிமையை உடையன. முத்திப் பேற்றுக்குள்ள சாதனம் ஞானாசாரியரை நிலைக்களமாகக் கொண்டு சிவபெருமான் செய்தருளும் சிவதீட்சைப் பேறு ஒன்றேயாம். வேறு எந்த முயற்சியாலும் முத்திப் பேற்றைப் பெறமுடியாது.

உயிர்கள் செய்யும் புண்ணியம், உயிர்களை நோக்கிச் செய்யப்படும் பசு புண்ணியம், கடவுளை நோக்கிச் செய்யப்படும் சிவ புண்ணியம் என இரு வகைப்படும். பசு புண்ணியப் பலன்கள் அனைத்தும் அழியுந் தன்மை உடையன. அழிவின்றி நிலைபேறுடையதாகிய உண்மை ஞானத்தைப் பசு புண்ணியத்தால் பெற முடியாது. பொருளை அடிப்படையாகக் கொண்டு நிகழுவது பசு புண்ணியம். தவத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழுவது பதி புண்ணியம். இச்சிவ புண்ணியம் அதற்கு அங்கமாகிய சிவ தீட்சையைப் பெற்றுச் சிவபெருமானிடத்து வைத்த பக்தி காரணமாக நிகழ்த்தப்பெற வேண்டும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் உடைய நம் போன்ற சகல வர்க்கத்து உயிர்களுக்கு நம்மனைய மனித வடிவு கொண்ட ஆசாரியரைச் சிவபெருமான் நிலைக்களமாக்க கொண்டு சிவதீட்சை செய்து உய்யக் கொள்ளுவார்.

வேதம் ஓதுவதிலும் வைதிக ஒழுக்கத்தை மேற்கொள்ளுவதிலும், உபநயனம் பெற்ற வர்க்கன்றிப் பார்ப்பன மரபில் பிறந்தமை காரணமாக மட்டும் அதிகாரம் வருவதில்லை. அதுபோல சைவாகமங்களை ஓதுவதிலும், சைவ ஒழுக்கத்தை மேற்கொள்ளுவதிலும், சிவதீட்சைப் பேறுடையார்க்கன்றிச் சைவ மரபிற் பிறந்தமையால் மட்டும் அதிகாரம் வரமாட்டாது.

சமயதீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை எனத் தீட்சை மூவகைப்படும். மனிதன் என்ற பொது நிலையிலிருந்து உயர்ந்து சைவன் என்ற சிறப்பு நிலையை ஒருவன் அடைவதற்கு உதவுவது சமய தீட்சையே ஆகும். சமய தீட்சை பெறாதவர்கள் செய்யும் சிவத்தொண்டுகள் நற்றொண்டுகளாக மட்டும் இருந்து அதற்குரிய அளவிற்குறைந்த பயனை வழங்குமேயன்றிச் சிவத்தொண்டுக்குரிய சிறந்த பயனை வழங்கமாட்டாது. சமய தீட்சிதர் ஸ்ரீ பஞ்சாட்சர ஜெபமும் ஒரு வேளைச் சைவானுட்டானமும் செய்யும் உரிமை உடையவர்கள். இரண்டாவதாகிய விசேட தீட்சையில் சீடனது ஆன்மா வாகீசுவரர், வாகீசுவரியிடம் சேர்ந்து, சிவகுமாரனாக ஆகும்படி செய்து, ஆன்மார்த்த சிவபூஜையும் இரண்டு வேளைச் சைவானுட்டானமும் செய்யும் உரிமையை ஆசாரியர் வழங்குவார். மூன்றாவதாகிய நிருவாண தீட்சையில் கன்மங்களுக்கு இடமாகிய மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறு அத்துவாக்களையும் சோதித்துச் சுத்தி செய்து மலநீக்கமும் மெய் ஞானமும் பெறுவித்து, மூன்றுவேளைச் சைவானுட்டானம், சிவபூஜை, அக்கினி காரியம் ஆகியவற்றைச் செய்யும் உரிமையை வழங்கித் தேக நீக்கத்தில் வீடுபேற்றை அடையும்வண்ணம் ஆசாரியர் செய்வார். தீட்சை என்ற

சொல்லுக்குக் கெடுத்துக் கொடுத்தல் என்று பொருள். இது மல வலியைக் கெடுத்தலும், சிவஞானத்தைக் கொடுத்தலுமாகும்.

சிவஞானபோத எட்டாஞ் சூத்திரத்தில் உயிர் சிவத்தையடைவதற்குரிய சாதனத்தை உணர்த்தும்போது, "ஆன்மா முன்னே செய்து கொள்ளப்பட்ட புண்ணிய விசேடத்தால் இப்பொழுது தனக்கு அந்தரியாமியாய் உள்நின்று இதுகாறும் உணர்த்திவந்த பரம்பொருளே குரு வடிவங் கொண்டு எழுந்தருளிச் சிவதீக்கை செய்து ஆன்மாவின் உண்மையியல்பை அறிவுறுப்ப முதல்வனோடு ஆன்மா அனன்னியமாம் தன்மையில் நிலை பெற்று அம் முதல்வன் திருவடிகளை அணையும்" என்று அருளப்பெறுகிறது.

ஆசாரியர் மலநீக்கம் செய்து ஞானம் வழங்கும் தீட்சைமுறை பலவிதமாகும். தனது அருட் பார்வையால் சீடனது சஞ்சித வினையை நீக்குவது நயனதீட்சை. திருக்கரங்களாலும் திருவடிகளாலும் தொட்டு மல வலிமையைக் கெடுப்பது பரிசதீட்சை. உபதேசத்தால் ஆட்கொள்ளுவது, வாசக தீட்சை. அருளுருவாக சீடனைப் பாவிப்பது மானஸ தீட்சை. ஞான நூல்களை உணர்த்துவது சாத்திர தீட்சை. யோகப் பயிற்சியில் நிறுத்துவது யோக தீட்சை. குண்டம் மண்டலம் முதலியவைகளைப் புறத்தில் அமைத்துச் செய்வது ஔத்திரி தீட்சை என்று சொல்லப்பெறும். குண்ட மண்டலமாகிய வற்றைப் புறத்திலமைத்துச் செய்வது, கிரியாவதியென்றும், அவற்றை அகத்திலமைத்துச் செய்வது ஞானவதியென்றும் நூல்கள் கூறுகின்றன. முட்டையின்மேல் அடைகிடந்து கோழி, குஞ்சுகளை வெளிப்படுத்துதல் பரிச தீட்சையையும், முட்டையை நினைத்து ஆமைக் குஞ்சுகளை வெளிப்படுத்தல் மானஸ தீட்சையையும், முட்டையைப் பார்த்து மீன் குஞ்சுகளை வெளிப்படுத்துதல் நயன தீட்சையையும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

சிவதீட்சை முதலிய எல்லாக் கிரியைகளும் சிவஞானங் கிடைப்பதற்கு நிமித்தமாகவே சைவத்தில் அமைந்துள்ளன. மனம், மொழி, மெய் ஆகிய மூன்று கரணங்களும் ஒன்ற நிகழுகின்ற கிரியைகளே உரிய பயனைத் தருவனவாம். அதனால் கிரியை முறையை அறியாதவர்கள், ஞானவதி செய்ய முற்படுவது அறியாமையின் பாற்பட்டதேயாம். ஒளியாலன்றி இருள் நீங்காதவாறு போலச் சிவஞானத்தாலன்றி ஆணவ மலம் நீங்காது. நிருவாண தீட்சையில் நிகழ்ந்த அத்துவசுத்தி, அதுவரை நிரம்பிக் கிடந்த சஞ்சித கன்மத்தை நீக்கும். பிராரத்த கன்மம் உடம்புடன் ஒழியும். ஆகாமிய கன்மம், யான், எனது என்னும் உணர்வை ஞான எரியால் வெதுப்பி செம்மை நெறியில் நிற்க, வந்து பொருந்தாது. இங்ஙனமாகிய வினை நீக்கம் இருவினை ஒப்பை உண்டாக்க அது மலபரிபாகத்தைச் செய்ய அதனால் சத்தினிபாதமும் சிவப்பேறும் நிகழும்.

சிவதீட்சை பெற்றுச் சிவபெருமானை வழிபடுபவர்களே உண்மைச் சைவர்களாவார்கள். உணவால் சைவமும், பிறப்பால் சைவமும், ஒருநாளும் வராது என்பதை நன்கு தெளிந்து அனைவரும் சிவதீட்சிதர்களாகி இன்பம் பெறுவார்களாக!

*நலமே தழைக!*

# காசி யாத்திரை செய்வது எவ்வாறு?

கலைமாமணி

கே. சி. லட்சுமிநாராயணன் அவர்கள்

( சென்ற இதழ் தொடர்ச்சி... )

## பாவங்கள் விலகும்

"பாவம் செய்தவர்கள் பாவத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதினால் அவர்கள் பிரயாகை செல்ல வேண்டும். பிரயாகையை வணங்கினால் எல்லாப் பாவங்களும் விலகிவிடும். பிரயாகை போக வேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டால், நண்பர்கள் தடுத்தாலும் அல்லது மற்றவர்கள் தடுத்தாலும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டாம். பிரயாகைக்குக் கட்டாயம் செல்லவும், எல்லா நன்மைகளும் உண்டாகும்" என்று "கூர்ம புராணம்" கூறுகிறது.

பிரயாகை பாரத நாட்டின் மிகவும் தொன்மையான தலம். அதன் பரப்பு, நான்கு திசைகளில் எல்லைகள் முத லியவை குறித்து "மத்ஸ்ய புராணம்" கூறுகிறது.

இராமேசுவர யாத்திரையை ஏழாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளபடி முடித்த பிறகு, பிரயாகை யாத்திரையை ஆரம்பிக்க வேண்டும். பிரயாகை இப்போது அலகாபாத் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி இருந்தபோது பல இந்திய நகரங்களின் பெயர்களை ஆங்கிலேய அரசினர் திட்டமிட்டுச் சூழ்ச்சி செய்து மாற்றிவிட்டார்கள். அவ்வாறு மாற்றப்பட்ட பெயர்களில் ஒன்று பிரயாகை.

## வைதிகக் காரியங்கள்

பிரயாகை என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்ற செய்தியை இந்தப் புத்தகத்தின் மூன்றாவது அத்தியாயத்தில் கூறி இருக்கிறேன். காசி யாத்திரையின் இரண்டாவது பகுதியாக பிரயாகை யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். பிரயாகையை அடைந்ததும், அங்கு செய்யவேண்டிய வைதியகக் காரியங்கள் கீழே வரிசை யாகத் தரப்படுகின்றன.

1. மகா சங்கல்பம்
2. வேணி தானம்
3. திரிவேணி சங்கம ஸ்நானம்
4. தனுஷ்கோடி மணலைக் கரைத்தல்
5. கங்கை நீர் எடுத்துக் கொள்ளுதல்
6. தீர்த்த சிராத்தம்
7. கங்கை பூஜை
8. தம்பதி பூஜை
9. சமாராதனை
10. ஆலய தரிசனம்

## சங்கமத்தில் பணி

பிரயாகையில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் ஒன்றாகக் கூடுகின்ற இடத்திற்கு கணவனும், மனைவியும் செல்ல வேண்டும். தண்ணீரில் சுமார் ஒரு மைல் தொலைவுக்கும் அதிகமாகப் போக வேண்டியிருக்கும். படகில்தான் செல்ல வேண்டும். கணவனும் மனைவியும் சேர்ந்து ஒரே படகில் போக வேண்டும்.

இந்தப் படகுப் பயணத்தை ஆரம்பிப் பதற்கு முன்பாக ஒரு முக்கியமான கடமையைச் செய்ய வேண்டும். ஆண்கள்

சவரம் செய்து கொள்ள வேண்டும். பாவம் விலக வேண்டும் என்பதை உத்தேசித்து முடியைக் களையும் காரியம் நடக்க வேண்டும்.

பிறகு படகில் சென்று, மூன்று நதிகளும் சங்கமமாகும் இடத்தில் படகை நிறுத்திக்கொள்ள வேண்டும். எங்கே படகு நிறக வேண்டும் என்பது படகோட்டிகளுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் அங்கே படகை வசதியாக நிறுத்துவார்கள். படகில் உடன்வரும் சாஸ்திரிகள் திரிவேணி சங்கமத்தில் என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்லுவார். அவர் அவற்றை மந்திரங்களுடன் நடத்தி வைப்பார்.

## தலைமுடியில் நுனி

சுமங்கலிகளாக இருக்கின்ற பெண்கள் தலையில் உள்ள மயிர்கள் அனைத்தையும் அங்கே நீக்கிவிட வேண்டாம் என்பது சாஸ்திரம். அவர்கள் கேசங்களை மூன்று பாகங்களாகப் பிரித்துப் பின்னிக் கொள்ள வேண்டும். அதற்குத் திரிவேணி என்று பெயர்.

பின்னல் செய்து கொள்ளப்பட்ட தலைமுடியின் நுனி பாகத்தில் ஓர்அங்குலம் போல கத்தரியால் துண்டித்துக் கொள்ள வேண்டும். பெண்கள் தலைமுடியை விரித்துக் கொண்டு நுனிபாகத்தைத் துண்டித்துக் கொள்ளக்கூடாது. தலைமுடியைப் பின்னிக் கொண்டு மங்கலமாக பூ அணிந்து கொண்டு நெற்றியில் குங்குமம் தரித்துக் கொண்டு கணவரை நமஸ்கரித்து, அவரது அனுமதியைப் பெற்றுக்கொண்டு பிறகு நுனிப் பாகத்தைத் துண்டித்துக் கொள்ள வேண்டும்.

இந்தச் சடங்கு படகில்தான் நடக்கும். கணவரும், புரோகிதரும், படகோட்டியும் இருப்பார்கள். "புண்ணியத் தலமான இந்தப் பிரயாகையில் நான் வேணி தானம் (தலைமயிரைத் தானமாக அளித்தல்) செய்கிறேன், எனது பாவங்கள் விலகட்டும். எனக்கு எல்லாப் பிறவிகளிலும் சௌபாக்கியம் விளங்கட்டும்" என்று பெண் வேண்டிக் கொண்டு, வெற்றிலை பாக்கு, பழம் முதலியவற்றுடன், துண்டிக்கப்பட்ட பின்னலின் இறுதித் துண்டையும் வைத்துத் தானமாகக் கொடுக்க வேண்டும்.

இது பொதுவான சாஸ்திரம். பிரயாகையில் உள்ள புரோகிதர்கள் சம்பிரதாயங்களை விவரமாகச் சொல்வார்கள்.

## தானம் செய்க

வேணி தானச் சடங்கு முடிந்ததும் கணவனும் மனைவியும் திரிவேணி சங்கமத்தில் – அதாவது கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் கூடுகின்ற இடத்தில் – ஸ்நானம் செய்ய வேண்டும். இதற்கு வேண்டிய வசதிகள் திரிவேணி சங்கமத் தலத்தில் செய்யப்பட்டுள்ளன.

பிறகு பிரயாகையில் தானங்கள் செய்ய வேண்டும். கன்யா தானம், பூமி தானம், ஸ்வர்ண தானம் முதலிய தானங்களை அங்கு செய்வது மிகவும் பயன் தரும் என்று "பிரம்ம புராணம்" குறிப்பிடுகிறது.

இத்தகைய தானங்களைச் செய்ய முடியவில்லை என்றால், பிரயாகையில் அன்னதானம் செய்யுங்கள் என்று 'பிரம்ம புராணம்' விதிக்கிறது.

திரிவேணி சங்கமத் தலத்தில் திலஹோமம், தர்ப்பணம், சிராத்தம் செய்து

பிதிரர்களைத் திருப்தி செய்ய வேண்டும். பிரயாகையில் இந்தக் கர்மங்களைச் செய்பவர்கள் ஏழு தலைமுறைகளைச் சேர்ந்த பிதிரர்களை மகிழ்வித்துப் பயன் அடைவார்கள்.

பிரயாகை தலத்துக்கு அதிபதி மாதவர். அவர் அங்கு தர்மம் செய்பவர்களுக்குச் சிறந்த பயன் அளிப்பார்.

## ஆலய தரிசனம்

பிரயாகையில் பிதிரர் கடமைகள் முடிந்த பிறகுதான் ஆலய தரிசனம் ஆரம்பிக்க வேண்டும். மாதவர், சோமன், பார்வதியுடன் கூடிய பரமேஸ்வரர், பரத்வாஜ மகரிஷி, வாசுகி என்ற பெயரில் விளங்கும் நாகதேவதை, தீர்த்த ராஜாவான பிரயாகை தேவதை, அட்சய வடம், ஆல விருட்சம், ஸ்தல விருட்சம், ஆதிசேஷன் ஆகியவர்களை பிரயாகையில் தரிசனம் செய்து முறைப்படி பூஜிக்க வேண்டும்.

பிரயாகையில் உள்ள புரோகிதர்கள் ஆலய தரிசனங்களுக்கு உதவி செய் வார்கள். அவர்களை உடன் அழைத்துக் கொண்டு ஒவ்வொரு இடமாகச் சென்று முறைப்படி தரிசனத்தை முடித்துக் கொள்ள வேண்டும். பிரயாகை திரிவேணி சங்க மத்தில் சடங்குகள் எல்லாம் முடிந்த பிறகு அங்கிருந்து தீர்த்தம் ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதை முக்கிய மாகக் குறித்துக் கொள்ள வேண்டும்.

காசி யாத்திரை செல்கின்ற பலர், கங்கை நீரைக் காசியிலிருந்து எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அது தவறு. காசி நகரின் பல கடைகளில் பாத்திரங்களில் நிரப்பப்பட்ட கங்கை நீரை விற்பார்கள். அதை வாங்கக்கூடாது.

## நீர் சேகரித்தல்

பிரயாகையில் திரிவேணி சங்கம இடத்தில்தான் – மூன்று நதிகளும் சேருகின்ற தலத்தில்தான் – நீரை இரண்டு கலசத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அங்கு எடுக்கப்படுகின்ற நீரை இரண்டு பணிகளுக்கு உபயோகிக்க வேண்டும். ஒரு கலசத்தைப் பாதுகாப்பாக வைத்திருந்து, மறுபடியும் இராமேசுவரம் செல்கின்றபோது அங்கு இறைவனுக்கு அந்த நீரைக் கொண்டு அபிஷேகம் செய்விக்க வேண்டும்.

மற்றொரு கலசத்தை யாத்திரை செல்பவர்களும், அவர்களது உறவினர் களும், நண்பர்களும் உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

பிரயாகையில் தீர்த்த சிராத்தம் மிக முக்கியமானது. திரிவேணி சங்கமத் தலத்தில் படகில் தீர்த்த சிராத்தம் செய்ய வேண்டும்.

பிரயாகையில் கங்கை பூஜையும், தம்பதி பூஜையும் சிறந்த பலன்களைக் கொடுக்கும். பிரயாகையில் யமுனை, சரஸ்வதி ஆகிய மகா நதிகளுடன் கங்கை கூடுகிறாள். அங்கே கங்கை அன்னையைப் பூஜிப்பது மிகவும் உத்தமம்.

## அன்னதானம்

பிரயாகையில் சமாராதனை செய்ய வேண்டும். சமாராதனை என்பது அன்ன தானம். உயர்ந்த வகுப்பினர் என்று கருதப்படுவோருக்கு மட்டும்தான் சாப்பாடு போடவேண்டும் என்று சாஸ்திரம் கூற வில்லை. பிரயாகையில் இருக்கக்கூடிய

ஏழை, எளிய மக்களை அவர்கள் எந்த வகுப்புக்களைச் சேர்ந்தவர் என்று பார்க்காமல் அன்புடன் அழைத்து அவர்களுக்கு வயிறார உணவு அளித்தால் பெரும் புண்ணியம் நிச்சயம்.

இந்தப் புத்தகத்தின் ஐந்தாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளபடி காசி யாத்திரையின் இரண்டாவது கட்டமாக பிரயாகை யாத்திரையை முடிக்க வேண்டும். பிரயாகை யாத்திரையை முடிக்காமல் காசியில் சடங்குகளை ஆரம்பிக்கக்கூடாது.

பிரயாகை யாத்திரை முடிந்தபிறகு, காசி யாத்திரையை எவ்வாறு ஆரம்பிக்க வேண்டும்? காசித் திருத்தலத்தில் என்னென்ன வைதீகக் காரியங்களைச் செய்ய வேண்டும்?

## மணிகர்ணிகை கட்டம்

காசி திருத்தலத்தில் செய்ய வேண்டிய வைதிகக் காரியங்கள், தரிசனம் செய்து பூஜிக்கவேண்டிய தேவதைகள் சம்பந்தமாக ஒரு பத்ததி உண்டு. அதன்படி செய்ய வேண்டும்.

பணத்திற்கு ஆசைப்படாதவர்களாகவும், யாத்ரீகர்களுக்கு உதவுவதையே நோக்கமாகக் கொண்டவர்களாகவும் உள்ள சில தமிழக அந்தணர்கள் காசி திருத்தலத்தில் வாழ்கிறார்கள். அவர்கள் சாதி வித்தியாசம் பாராட்டுபவர்கள் இல்லை.

தங்குவதற்கு இடமும், வசதியாக உணவு அளிப்பதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். யாத்திரை செல்பவர்கள் காசி நகரை அடைந்ததும், அவர்களில் ஒருவரை அணுகினால் நல்லது. முறைப்படியும், சாஸ்திரங்களுக்கு இசைவாகவும் எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு அவர்கள் அன்புடன் உதவுவார்கள்.

## பணிகள் எவை?

காசி திருத்தலத்தில் அடியிற் குறிப்பிடப்படும் பணிகளைச் செய்ய வேண்டும்.

1. மகா பிராயச்சித்த சங்கல்பம்.
2. மணிகர்ணிகை ஸ்நானம், வபனம், சக்கர தீர்த்த ஸ்நானம்.
3. விசுவேசுவர, அன்னபூரணி, விசாலாட்சி, பிந்துமாதவ தரிசனம்.
4. தீர்த்த சிராத்தம்.
5. பஞ்சகங்கை தீர்த்தங்களில் சங்கல்பம், ஸ்நானம், ஹிரண்ய சிராத்தம், பிண்டதானம், தில தர்ப்பணம்.
6. கங்கை பூஜை.
7. தம்பதி பூஜை.
8. கால பைரவ சமாராதனை
9. ஸ்தல தேவாலய தரிசனம், விசுவேசுவரருக்குப் பால் அபிஷேகம், சப்த ரிஷி பூஜை, விசுவேசுவரர் உச்சி கால தரிசனம், அர்த்தஜாம பூஜை.
10. வியாச தரிசனம், வியாச காசியில் ராம்கட் என்ற தலத்தில் மகாராஜ தரிசனம்.
11. கங்கையில் தினசரி ஸ்நானம்.
12. விரதங்கள் உத்யாபனம்.

## சங்கல்பம்

காசி ஹிந்துக்களின் புண்ணிய பூமி. அங்கு யாத்திரை செல்பவர்கள் அவசர கோலமாகப் பணிகளை முடிப்பதாகக் கூறிக்கொண்டு இரண்டொரு நாட்களில் அங்கிருந்து கிளம்பிவிடக்கூடாது. யாத்திரைக் கிரமம் உண்டு. அதன்படி நிதானமாகவும், பொறுப்புணர்வுடனும், பிழை இல்லாமலும் எல்லாக் காரியங்களை

யும் செய்த பிறகுதான், காசியிலிருந்து புறப்பட வேண்டும்.

காசியில் முதல் நாள் கங்கையில் ஸ்நானம் செய்த பிறகு அனுக்ஞை, சங்கல்பம் ஆகியவற்றுடன் ஆரம்பிக்க வேண்டும். அங்கு செய்வது மகா பிராயச்சித்த சங்கல்பம். வாழ்க்கையில் அந்த நாள் வரையில் தெரிந்தோ, தெரியாமலோ செய்திருக்கக் கூடிய பாவச் செயல்களின் விளைவுகளிலிருந்து விடுபடுவதற்காக அந்தச் சங்கல்பம் செய்யப்படுகிறது.

சங்கல்பம் என்றால் உறுதி ஏற்பது என்று அர்த்தம். "காசிக்கு வந்துவிட்டேன், எனது கர்மங்கள் தொலைய வேண்டும். இனிமேல் நான் தர்ம வாழ்க்கை வாழ உறுதி ஏற்கிறேன்" என்று மனமார அறிவிக்க வேண்டும்.

ஐயர் ஏதோ சொல்கிறார் என்று கவனக் குறைவாக இருக்கக்கூடாது. மகா பிராயச்சித்த சங்கல்பத்தின் ஒவ்வொரு வார்த்தையும் ஆழமான பொருள் கொண்டது. அதை அந்தரங்கசுத்தியுடன் சொல்ல வேண்டும்.

**விஷ்ணுவின் தவம்**

மகா பிராயச்சித்த சங்கல்பம் முடிந்த பிறகு, மணிகர்ணிகை ஸ்நானம்.

காசியில் மணிகர்ணிகை கட்டம் என்று உள்ளது. அதற்கும் புராண வரலாறு உண்டு.

சிவபெருமானுடைய ஆக்ஞையை அனுசரித்து மகா விஷ்ணு காசித் திருத்தலத்தில் தவம் செய்யக் கருதினார். அவர் தமது சக்கர ஆயுதத்தால் ஓர் அழகிய குளத்தை ஏற்படுத்தினார். அந்தத் திருக்குளத்தில் நீர் நிரம்பும் படியாகவும் மகா விஷ்ணுவே செய்தார்.

மகா விஷ்ணு காசியில் அமைத்த அந்தக் குளத்திற்குச் சக்கர தீர்த்தம் என்று பெயர். சக்கர தீர்த்தத்தின் கரையில் மகா விஷ்ணு கடுமையாகத் தவம் இருந்தார். அவர் ஐம்பது ஆயிரம் வருட காலம், ஒரே இடத்தில் அமர்ந்து, சிறிது கூட உடல் அசைவு இல்லாமல் – மரக்கட்டைபோல இருந்து தவம் செய்தார்.

தவமிருந்த மகாவிஷ்ணு முன்பாகச் சிவபெருமான் காட்சி தந்தார். "ஹே! மகா விஷ்ணு! உமது கடுமையான தவத்தினால் நான் மகிழ்ச்சி அடைந்தேன். நீங்கள் தவம் செய்தது போதும், நீங்கள் வரம் கேட்கலாம்" என்று சிவபெருமான் மகா விஷ்ணுவிடம் கூறி அருளினார்.

**மணிகர்ணிகை**

மகா விஷ்ணுவின் கடுமையான தவம் சிவபெருமானையே ஆச்சரியப்பட வைத்தது. இதை முக்கண்ணனே கூறினார். "விஷ்ணு பகவானே! உமது தவத்தைக் கண்டு வியப்பினால் தலையைச் சிறிது ஆட்டினேன். அதனால் எனது காதில் இருந்த நாக மயமான கர்ண ஆபரணம் கீழே விழுந்தது. ஆகையால் இந்த இடத்திற்கு மணிகர்ணிகை என்று பெயர் ஏற்படும்" என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்து அருளினார்.

மணிகர்ணிகை கட்டம் என்ற புனிதப் பகுதி சிவபெருமான், மகாவிஷ்ணு

இருவரது சாந்நித்தியமும் கொண்டது. அது விசேஷ புண்ணிய பலத்தை அளிக்கும் ஆற்றல் படைத்தது.

**பெரும் புண்ணியம்**

சர்வ தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தால் எத்தகைய புண்ணியம் கிடைக்குமோ, அதைப்போல் கோடி மடங்கு புண்ணியம் மணிகர்ணிகை கட்ட ஸ்நானத்தினால் கிடைக்கும்.

இது பகவானின் வாக்கு. மணி கர்ணிகை கட்டத்தில் பக்தியுடன் ஸ்நானம் செய்வது அவ்வளவு விசேஷம்.

மணிகர்ணிகை கட்டத்தில் ஸ்நானம் செய்து, முறைப்படி பூஜை முடிப்பவர்கள், பிரம்மாவின் பிரம்மலோகத்தில் ஒரு கல்ப காலம் எல்லாவிதமான வசதிகளுடன் வசிப்பார்கள் என்று பிரம்மாவே கூறியிருக்கிறார்.

(ஆயிரம் சதுர் யுகம் கொண்டது ஒரு கல்ப காலம்)

மணிகர்ணிகை கட்டத்தில் ஸ்நானம் செய்வதைப் போல, மகாவிஷ்ணு உருவாக்கி வழங்கியுள்ள சக்கர தீர்த்தத்திலும் பக்தியுடன் ஸ்நானம் செய்ய வேண்டும்.

**தீர்த்த சிராத்தம்**

இரண்டாம் நாள், தீர்த்த சிராத்தம்.

கணவனும், மனைவியும் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு ஒரு படகில் அமர வேண்டும். புரோகிதரை உடன் அழைத்துச் செல்ல வேண்டும்.

அந்தப் படகில் அடுப்பு, அரிசி முதலியவை எடுத்துக் கொள்ள வேண்டும். படகிலேயே அடுப்பை மூட்டி அன்னம் தயாரிக்க வேண்டும். இது மனைவியின் பணி.

படகு கிளம்பி ஒவ்வொரு தீர்த்தக் கரையிலும் நிற்கும். அங்கு சிராத்தத்தைப் பக்தியுடன் செய்து பிதிரர்களை வழிபட வேண்டும். ஒவ்வொரு தீர்த்தக் கரையிலும் ஒவ்வொரு முறை ஸ்நானம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு சிராத்தத்திற்கும் தனித் தனியாக அன்னம் தயாரிக்க வேண்டும்.

இரண்டாம் நாள் தீர்த்த சிராத்தம் முறைப்படி செய்து முடித்துத் திரும்ப பிற்பகலுக்கு மேல் ஆகிவிடும்.

திரும்பிய பிறகு தச தானம், பஞ்ச தானம், இதர தானங்கள் முதலியவற்றைச் செய்ய வேண்டும்.

தானம் தருகிறோம் என்ற கர்வம், அகங்காரம் சிறிதும் இல்லாமல் அடக்கத்துடன் அளிக்க வேண்டும்.

கணவன் – மனைவி இருவரும் சேர்ந்துதான் தீர்த்த சிராத்தம் செய்ய வேண்டும். மனைவி இல்லாமல் செய்வதற்குக் கணவனுக்கு அதிகாரம் கிடையாது.

**பஞ்ச கங்கை**

மூன்றாவது நாள் பஞ்ச கங்கை ஸ்நானம்.

பஞ்ச கங்கைக்கு மேன்மையான வரலாறு உண்டு.

பகீரதன் கங்கையைப் பூலோகத்திற்கு அழைத்து வந்தான். இது பற்றி ஏற்கெனவே கூறியிருக்கிறேன்.

கங்கை பூலோகத்திற்குக் கொண்டு வரப்பட்டதற்கு முன்பாகக் காசி க்ஷேத்திரத்தில் தர்மநதம் என்று தீர்த்தம் இருந்தது. பிறது தூதபாபா என்ற நதி தர்மநத நதியோடு கலந்தது.

தூதபாபா என்றால் பாவத்தை விரட்டியவள் ஏனறு அர்த்தம்.

பின்னர், கிரணா என்ற நதியுடன் தர்மநத நதியும், தூதபாபா நதியும் இணைந்தன. பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தபோது தர்மநதம், தூதபபா, கிரணா ஆகிய மூன்று நதிகளும் கங்கையுடன் சேர்ந்தன.

பிரயாகை தலத்தில் கங்கையுடன் யமுனை சரஸ்வதி நதிகள் சேர்ந்துள்ளன.

இவ்வாறு தர்மநதம், தூதபாபா, கிரணா, கங்கை, யமுனை, சரஸ்வதி என்று பல நதிகள் ஒன்றாக இணைந்துள்ளன. காசியில் தர்மநதம், தூதபாபா, கிரணா ஆகியவை கங்கையுடன் சேர்ந்த இடம் பஞ்ச கங்கை தீர்த்தம் என்ற பெயரில் விளங்குகிறது.

**பிண்ட தானம்**

பெரும் புண்ணியம் தரக்கூடிய இந்தப் பஞ்ச கங்கை தீர்த்தத்தில் மூன்றாவது நாள் சங்கல்பம் செய்து கொண்டு பிறகு ஸ்நானம் செய்ய வேண்டும்.

காசி திருத்தலத்தில் அநேக தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் புனிதமானவை – தெய்வீகத் தன்மை வாய்ந்தவை என்பது நிச்சயம். ஆனால் பஞ்ச கங்கை தீர்த்தத்திற்கு அவற்றில் எதுவும் இணையானது இல்லை என்பது சாஸ்திரம்.

அங்கு ஸ்நானம் முடித்த பிறகு பிதிரர்களுக்குத் தீர்த்த சிராத்தம் செய்ய வேண்டும். பிண்ட தானம் தில தர்ப்பணம் ஆகியவையும் அவசியம்.

பஞ்ச கங்கை கட்டத்தில் சிராத்தம் செய்வது விசேஷமான பலன்களைக் கொடுக்கும்.

## நித்திய யாத்திரை

காசியில் நான்காவது நாள் செய்ய வேண்டிய காரியங்கள் எவை?

காசியில் நான்காவது நாள் நித்திய யாத்திரையை ஆரம்பிக்க வேண்டும் என்பது சாஸ்திரம். நித்திய யாத்திரை மிகவும் விசேஷமானது. நான்கு வித புருஷார்த்தங்களையும் நித்திய யாத்திரை அளிக்கக்கூடியது. நித்திய யாத்திரையை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

முதலில் சுக்ர புஷ்கரணியில் ஸ்நானம் முடித்து, தேவபிதிரர்கள் குறித்துத் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

அங்கிருந்து புறப்பட்டு துருபதாதித்யேசுவரர், தம்பத்தேசுவரர் ஆகியோரை அர்ச்சிக்க வேண்டும். விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும்.

தண்டபாணி, மகேசுவரர், துண்டி ராஜன் இவர்களைப் பூஜித்து, ஞான வாவியில் மறுபடியும் ஸ்நானம் செய்ய வேண்டும்.

பிறகு நந்திகேசுவரர், தாரகேசுவரர், மகாகாளேசுவரர், தண்டபாணி, விநாயகர் இவர்களை ஆராதிக்க வேண்டும்.

விச்வேசுவரர், ஓங்காரேசுவரர் லிங் கங்களைப் பூஜிக்க வேண்டும்.

**பிரதமை முதல்**

பிரதமையன்று, ஸ்நானம் செய்து, திரிலோசன மகாதேவர் என்கிற இரட்டை லிங்கத்தைத் துவிதியை, திரிதியை இந்த இரண்டு நாட்களிலும் பூஜிக்க வேண்டும்.

சதுர்த்தியன்று கஞ்சிவாச லிங்கத்தை யும் பஞ்சமியன்று ரத்தினேசுவரரையும், சஷ்டியன்று சுந்தரேசுவரனையும், சப்தமி யன்று கேதாரேசுவரரையும் பூஜிக்க வேண்டும்.

அஷ்டமியன்று, தர்மேசுவரரையும் நவமியன்று மகாலிங்கமான விசுவேசு வரரையும் தசமியன்று காமேசுவரரையும் வழிபட வேண்டும்.

ஏகாதசியன்று விசுவேசுவரரையும் துவாதசியன்று மணிகர்ணிகை கட்டத்தில் உள்ள மணிகர்ணிகேசுவரரையும் பூஜிக்க வேண்டும். திரயோதசி பிரதோஷ வேளையில் அவிமுக்தேசுவரரையும் சதுர்த்தசியன்று விசுவேசுவரரையும் பூஜிக்க வேண்டும். இவ்வாறு பூஜித்து யாத்தி ரையைப் பூர்த்தி செய்பவர்களுக்கு ஒருவிதமான விக்கினமும் ஏற்படாது.

சுக்ல பட்சத்தில் யாத்திரை செய்து, பிறகு கிருஷ்ண பட்சத்தில் யாத்திரையை முடிக்க வேண்டும்.

**சதுர்த்தசி முதல்**

சதுர்த்தசி அன்று ஆரம்பித்து, தினமும் யாத்திரை செய்ய வேண்டும்.

வருணா நதியில் ஸ்நானம் செய்து, சைலேசுவரரைத் தரிசித்து, சங்கமேசு வரரைப் பூஜித்து, அடுத்த நாள் சுவர்க்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, சுவர்க்கேசு வரரைப் பூஜித்து அடுத்த நாள் மந்தாகி னியில் ஸ்நானம் செய்து, மத்திமேசு வரரை வழிபட வேண்டும்.

அடுத்த நாள் மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்து ஈசுவரரையும், ஹிரண் யகர்ப்பனையும் பூஜிக்க வேண்டும்.

தர்ம கூபத்தில் ஸ்நானம் செய்து கோபத்மேசுவரரைப் பூஜிக்க வேண்டும்.

சப்தமியன்று கபிலதாரா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, விருட்சபத்வஜ லிங்கத்தை வழிபட வேண்டும்.

உபசாந்தி கூபத்தில் ஸ்நானம் முடித்து, உபசாந்தேசுவரரை வணங்கி, பஞ்சகூட குளத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும்.

அன்றைக்கு, ஜேஷ்டேசுவரரைப் பூஜித்து சதர் சமுத்திரகூபம் என்ற குளத்தில் ஸ்நானம் செய்து, சுமத்திரேசுவரரை வழிபட வேண்டும். சுக்கிரேசுவரரின் சந்நிதியில் உள்ள குளத்தில் நீராடி, அவரையும் துதிக்க வேண்டும்.

பிறகு தண்டகாத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, வியாக்கிரேசுவரரைப் பூஜித்து சௌனகேசுவர தீர்த்தத்தில் குளித்து, அங்குள்ள லிங்கத்தை வழிபட வேண்டும்.

ஜம்பு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, ஜம்புகேசுவரரைப் பூஜிக்க வேண்டும்.

**லிங்க பூஜைகள்**

கிருஷ்ணபட்சம், சுக்லபட்சம் இந்த இரு பட்சங்களிலும் அஷ்டமி திதியன்று கீழே குறிப்பிடப்படும் ஒன்பது லிங்கங்களை யும் பூஜிக்க வேண்டும்.

1. மோட்சேசுவரர்
2. பசுபதேசுவரர்
3. பர்வதேசுவரர்
4. கங்கேசுவரர்
5. நர்மதேசுவரர்
6. பக்தேசுவரர்
7. கபஸ்தேசுவரர்
8. மத்யமேசுவரர்
9. தாரகேசுவரர்

இவை நவலிங்கங்கள்; நவலிங்க பூஜை மிகவும் உயர்ந்தது. இவை தவிர, தினசரி பதினொரு லிங்கங்களை யாத்திரை செய்து பூஜிக்க வேண்டும்.

அக்னிதுர்வேசுவரர், ஊர்வசீசுவரர் நகுலேசுவரர், ஆஷாடேசுவரர், பாரபூதே சுவரர், லாங்கூலேசுவரர், பிராகாமேசு வரர், பிரீதேசுவரர், மந்தாலிகேசுவரர், திளபர்ணேசுவரர், திரிபுராந்தகர் – இவை பதினொரு லிங்கங்கள்.

**மானச யாத்திரைகள்**

காசியில் லிங்க வழிபாடு மிகவும் முக்கியம். காசியில் நித்திய யாத்திரை எப்போது செய்யவேண்டும் என்பதை "ஸ்ரீபாத ஸ்ரீ வல்லப ஸ்ரீநரசிம்ம சரஸ்வதி சத்குரு சரித்திரம்" என்ற நூல் மிக விரிவாக விவரிக்கிறது.

காசியில் பஞ்சக்ரோச யாத்திரை செய்வது மிகவும் சிலாக்கியம்.

மணிகர்ணிகை கட்டத்தில் பக்தியுடன் ஸ்நானம் செய்து, அங்குள்ள விநாயகரைத் தரிசித்து, பாஞ்சானேசுவரரை நமஸ்கரித்து, பஞ்சக்ரோச யாத்திரையைச் செய்ய வேண்டும்.

தட்சிண மானச யாத்திரை, உத்தர மானச யாத்திரை என்றும் இரு சிறப்பான யாத்திரைகள் உண்டு.

(தட்சிணம் என்றால் தெற்கு உத்தரம் என்றால் வடக்கு)

மணிகர்ணிகை கட்டத்தில், கங்கை உத்தர வாஹினியாகப் பாயும் இடத்தில் ஸ்நானம் செய்து தட்சிண மானச யாத்தி ரையையும், பஞ்ச கங்கையில் ஸ்நானம் செய்து, உத்தர மானச யாத்திரையையும் ஆரம்பித்துச் செய்ய வேண்டும்.

**சிராத்த தீர்த்தங்கள்**

காசியில் ஏராளமான தீர்த்தங்கள் உள்ளன. கூபம், குளம், குண்டம் என்ற பெயர்களில் இவை விளங்குகின்றன. இவை அனைத்தும் புனிதமானவை.

தர்மகூபம் என்கிற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, முன்னோர்களுக்குச் சிராத்தம் செய்ய வேண்டும்.

மானச சரோவம் என்கிற தீர்த்தத்தில் குளித்துப் பிதிரர் தர்ப்பணமும் சிராத்தமும் செய்ய வேண்டும்.

கேதார குண்டத்தில் குளித்துத் தர்ப்பணமும், கிரிமி குண்டத்தில் நீராடி சிராத்தமும் லோலார்க கூபத்தில் ஸ்நானம் செய்து சிராத்தமும் செய்ய வேண்டும்.

**பூஜை குண்டங்கள்**

காசியில் பூஜைகளுக்கும், வழிபடுவதற்கும் உரிய பல குண்டங்கள் அமைந்து திகழ்கின்றன. எந்தெந்த குண்டங்களில் எந்தெந்த தெய்வங்களை வணங்கலாம்?

| | | |
|---|---|---|
| ஞானவாபி | – | ஞானேசுவரர் |
| கேதார குண்டம் | – | கேதாரேசுவரர் |
| அமிர்த குண்டம் | – | துர்கா விநாயகர் |
| சங்கோத்வா குண்டம் | – | சங்க விஷ்ணு |
| காமாட்சி குண்டம் | – | காமாட்சி அம்மன் |
| அயோத்தி குண்டம் | – | ராமபிரான் |
| லவாங்குச குண்டம் | – | லவகுசர்கள் |
| லட்சுமி குண்டம் | – | லட்சுமி நாராயணன் |
| வைஜநாத குண்டம் | – | வைஜநாதர் |
| கோதாவரி குண்டம் | – | கௌதமேசுவர லிங்கம் |
| அகஸ்தி குண்டம் | – | அகஸ்தேசுவரர் |
| சுக்ர கூபம் | – | சுக்கிரேசுவரர் |
| காளகூபம் | – | காளேசுவரர் |
| மேல் மந்தாகினி | – | மத்திமேசுவரர் |
| ஜேஷ்டவாபி | – | ஜேஷ்டேசுவரர் |
| சங்கவாபி | – | ரத்தினேசுவரர் |
| தண்டகாத கூபம் | – | பூத, பைரவர், ஈசானேசுவரர் |
| சப்த சாகரம் | – | வால்மீகேச்வரர், பீமேசுவரர் |

**பசு தானம்**

மாதுர், பிதிர் குண்டங்கள் என்று இரண்டு தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் ஸ்நானம் செய்து பிதிரருக்குச் சிராத்தம் செய்வது மிகவும் நல்லது.

சக்கர குண்டம், கபாலமோசனம், பாப விமோசனம் ஆகிய குண்டங்களும் பிதிரர் கடமைகளைச் செய்ய ஏற்றவை.

வைதரணி என்ற தீர்த்தத்தில் ஸ்நானம் முடித்து சிராத்தம் செய்ய வேண்டும். அங்கு கோதானம் (பசுமாட்டைத் தானமாக வழங்குதல்) மிகுந்த புண்ணியம் தரும்.

கபிலதாரா என்கிற இடத்தில் சிராத்தம் செய்து, கன்றுக்குட்டியுடன் கூடிய பசுவைத் தானம் செய்ய வேண்டும் என்பது விதி.

காசி என்ற புனிதத் தலத்தின் பரப்பில் ஒவ்வொரு அங்குலமும் உயர்வானது. திருக்குளங்களும், ஆலயங்களும் தெய்வத் திருமேனிகளும் அமைந்து திகழ்வது; இங்கு நான் தந்துள்ள பட்டியல் முழுமையானது இல்லை. இன்னும் பல குண்டங்களும், தெய்வ சந்நிதிகளும் அங்கு உள்ளன. அவை அனைத்துக்கும் யாத்ரீகர்கள் சென்று வழிபட வேண்டும்.

**வியாசரின் சாபம்**

ஒரு சமயம் வியாச முனிவர் காசி க்ஷேத்திரத்தில் பிக்ஷை கேட்டுச் சென்றார். ஒருவரும் பிக்ஷை அளிக்கவில்லை. வியாசர் கோபம் கொண்டார்.

அவர் கோபத்தின் விளைவாக ஒரு சாபத்தைக் காசி நகர மக்களுக்குக் கொடுத்தார்.

“காசியில் வசிப்பவர்களுக்கு மூன்று தலைமுறைகளுக்கு வரிசைக்கிரமமாக

வேத வித்யை ஏற்படாது. மூன்று தலை முறைகளுக்குச் சேர்த்து பொருள் வரிசைக் கிரமமாக இருக்கக்கூடாது. மூன்று தலை முறைகளுக்கு உறவினர்கள் பரஸ்பரம் அன்புடனும் சிநேக உணர்வுடனும் இருக்கக் கூடாது" என்று வியாசர் சாபம் தந்தார்.

வியாசர் பெரும் பெருமை வாய்ந்தவர். வேதத்திலேயே இதற்குச்சான்று குறிப்பிட லாம். 'வேதத்தின் அபிப்ராயம் இது. என்று வியாசர் கூறியிருந்தார் என்றால் அது தான் மரபு என்று ஒப்புக் கொள்ளலாம். ஆனால் 'வியாசரின் அபிப்ராயம் இது' என்று வேதமே கூறியிருக்கிறது. இதிலிருந்து வியாசரின் பெருமை எத்தகையது என்பதை அறியலாம்.

மகாபாரதம் எழுதி வழங்கியவர் வியாசர்.

## துவேஷத்திற்குத் தண்டனை

இத்தகைய சிறப்பும், மேன்மையும் கொண்ட வியாசரே கோபம் என்ற தீய இயல்புக்கு இரையாகிவிட்டார்.

காசி திருத்தலம் சிவபெருமானின் ராஜ்யம். விசுவேசுவரர் வியாசரை அழைத்தார். "வியாசரே! பரம கோபம் உள்ள நீங்கள் இந்தக் காசியில் சிறிது நேரம் கூடத் தங்கியிருக்கக் கூடாது. நீங்கள் உடனடியாகக் காசியை விட்டு வெளியேற வேண்டும்" என்று விசுவேசுவரர் வியா சருக்கு ஆணையிட்டு விட்டார்.

வியாசர் மகா புத்திமான், எனினும் ராகத்துவேஷம் கொண்டவராகி விட்டபடி யால் அவர் காசியில் வசிக்கக் கூடாது என்று இறைவன் கட்டளையிட்டார்.

எனினும், வியாசர் இறைவனைச் சரணடைந்தார். ஆகவே அவரை ஒரேயடி யாக விரட்ட ஆண்டவன் திருவுள்ளம் கொள்ளவில்லை.

"எனது க்ஷேத்திரமான காசியிலிருந்து வெளியே சமீபமான ஓர் இடத்தில் இருந்து கொண்டு என்னைப் பூஜை செய்யுங்கள்; ராகத்துவேஷம் உம்மை விட்டு நீங்கும்; பிறகு நீங்கள் காசிக்குத் திரும்பி வந்து இங்கேயே வசிக்கலாம்" என்று விச்வேசு வரர் கூறி அருளினார்.

## வியாச காசி

அந்த ஆணையின் வண்ணம் வியாசர் வெளியில் தங்கிச் சிவபூஜை செய்தார். அந்த இடம் வியாச காசி என்று பெயர் பெற்றுள்ளது.

காசி யாத்திரை செய்பவர்கள் நான்காவது நாள் வியாச காசி சென்று தரிசனம் செய்ய வேண்டும். கோப உணர்வு அகல வேண்டும் என்று வியாச காசியில் பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும்; பிரார்த்தனை பலிக்கும்.

காசியில் ஐந்தாவது நாள் செய்ய வேண்டிய காரியங்கள் எவை?

## அஸ்தி போடுவது ஏன்?

இந்தியாவின் பண்டைய சிறப்பையும், கலாசாரப் பெருமையையும் தெய்வீகச் சிந்தனைகளையும் கங்கை நதி பிரதி பலிக்கிறது. இந்திய நதிகளில் மிகவும் புனிதமானது கங்கை என்பதையும், கங்கையின் வரலாறு பவித்திரமானது என்பதையும் ஏற்கெனவே விபரித்தி ருக்கிறேன்.

கங்கை, பாவங்கள் எல்லாவற்றையும் போக்குபவள். கங்கையைப் பூஜிப்பது புண்ணியம். கங்கையைக் காசியில் பூஜிப்பது பெரும் புண்ணியம்.

காசி யாத்திரையில் ஐந்தாவது நாள் கங்கை பூஜை செய்ய வேண்டும். கங்கையில் குளித்து, கங்கைக் கரையில் அமர்ந்து, கங்கையை விதிப்படி வழிபட வேண்டும்.

## தம்பதி பூஜை

அடுத்தபடியாக தம்பதி பூஜை செய்ய வேண்டும். வயது முதிர்ந்த கணவன், மனைவி இருவரையும் மனைகளில் உட்காரவைத்து, அவர்களை மணமக்க ளாகக் கருதிச் சடங்குகளைச் செய்து அவர்களுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலிருந்து காசிக்குச் செல் பவர்கள், இங்கேயே சேலை, வேஷ்டி, ரவிக்கைத் துண்டுகள், திருமாங்கல்யம் முதலியவற்றை வாங்கிக் கொண்டு போவது நல்லது. பணியாரம், இனிப்பு வகைகள், பட்சணங்கள் ஆகியவற்றையும் இங்கேயே தயாரித்து எடுத்துக் கொண்டு போவது உசிதம்.

தம்பதி பூஜையை முறைப்படி செய்து முடித்ததும், தம்பதிகளுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் வடை பாயாசத்துடன் இனிப்பு வகைகளையும் படைத்து விருந்து அளிக்க வேண்டும். தம்பதி பூஜைக்குப் பிறகு இவ்வாறு அன்னதானம் செய்வது மிகவும் உத்தமம்.

ஏழைகளாக – எளியவர்களாக – உள்ள கணவன், மனைவிக்குத் தம்பதி பூஜை செய்வது சிறந்தது. சாதி வேறுபாடு கருதாமல் எவரையும் தம்பதி பூஜைக்கு அமர்த்தலாம்.

தம்பதி பூஜைக்கு உட்காருபவர் களைப் பார்வதி, பரமேசுவரனாகக் கருதிப் பக்தியுடன் சடங்குகளைச் செய்ய வேண்டும்.

## பால் அபிஷேகம்

அடுத்ததாக, கால பைரவர் சமாராதனை நடத்த வேண்டும். காசியில் உள்ள புரோ கிதர்கள் இதை நடத்திக் கொடுப்பார்கள்.

காசியில் அன்னபூரணி, விசாலாட்சி சமேத விசுவநாதர் எழுந்தருளி இருக்கிறார். விசுவநாதருக்குப் பால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

விசுவநாதருக்கு உச்சிக்கால பூஜையும், அர்த்த ஜாம பூஜையும் நடைபெறும்போது தரிசனம் செய்வது புண்ணியம் தரும். அங்கு சப்தரிஷி பூஜை கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.

காசி விசுவநாதர் ஆலயத்தில் ஒரு விசேஷம். அங்கு ஆண்டவனை பக்தர்கள் கைகளால் தொட்டு வழிபட அனுமதியுண்டு. பக்தர்கள் உடலையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டு, இறைவனின் திருமேனியைத் தீண்டி அருள் பெறலாம்.

## நல்ல வினைகள்

விசுவநாதர் ஆலயத்தில் உள்ள விசுவநாத லிங்கம் ஜோதி லிங்கம். அது தானாக உருவான சுயம்புலிங்கம். 12 ஜோதி லிங்கங்களில் அது ஒன்று.

விசுவநாதரைப் பூஜித்து, மூன்று முறை பிரதட்சிணம் செய்து, பத்து முறை நமஸ்காரங்கள் செய்ய வேண்டும் என்பது சாஸ்திரம்.

காசியில் தரிசனம் செய்து பூஜிக்க வேண்டிய தேவதைகள் ஏராளமாக அமைந்துள்ளன. இவற்றை ஏற்கனவே சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

விசுவநாதர், பிந்து மாதவர், டுண்டி, கணபதி, தண்டபாணியான யட்சபதி, பைரவர், காசி வேதை, கங்கை, பார்வதி, மணிகர்ணிகை பிரதானமாகத் தரிசிக்க வேண்டிய தேவதைகள்.

காசியில் தங்கியிருக்கும் நாட்களில் பக்தர்கள் தினசரி கங்கை ஸ்நானம் செய்து விசுவநாதரைத் தரிசிக்க வேண்டும். அந்தந்த தீர்த்தக் கட்டங்களில் நீராடி தேவதைகளைப் பூஜிக்க வேண்டும்.

நல்ல வினைகளின் பயன் நலம்; கெட் காரியங்களின் விளைவு துக்கம். காசி திருத்தலத்தில் இது மிகவும் பிரத்தியட்சம். ஆகவே காசியில் தங்கியிருக்கும் நாட்களில் பக்தர்கள் நல்ல காரியங்களையே செய்ய வேண்டும் என்றும், கெட்ட காரியங்களைச் செய்யக்கூடாது என்றும் விதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகக் காம உணர்வுகளுக்கு யாத்திரீகர்கள் இடமளிக்கக் கூடாது. போதைப் பொருட்களின் அருகில்கூடச் செல்லக் கூடாது.

## முனிவரின் பிரார்த்தனை

அக்னி பிந்து என்பவர் ஒரு மாபெரும் முனிவர். அவர் மகாவிஷ்ணுவை உத்தேசித்து ஒரு வரம் கோரினார்.

"பகவானே! கேசவா!! தாங்கள் பிரபஞ்சம் முழுவதும் வியாபித்து இருக்கிறீர்கள். இந்தக் காசித் திருத்தலத்தில் பஞ்சநதிக் கரையில், சகல ஜீவன்களின் நலனைக் கருதித் தாங்கள் தங்கி வாசம் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்" என்று மகரிஷி அக்னி பிந்து கேட்டுக்கொண்டார்.

பகவான் மகாவிஷ்ணு அந்தப் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டார்.

"அக்னி பிந்து முனிவரே! உமது பிரார்த்தனையை உத்தேசித்து இந்தக் காசித் திருத்தலத்தில் பக்தர்களுக்கு முக்தி மார்க்கத்தைத் தெரிவித்துக் கொண்டு இங்கேயே தங்குகிறேன். உமது பெயரில் ஒரு பகுதி எனது திருப்பெயருடன் சேர்த்துக் கொள்ளப்படும். காசியில் எனது திருநாமம் "பிந்து மாதவர்" என்று விளங்கும். என்ற விஷ்ணு கூறி அருளினார்.

## பிந்து மாதவர்

இவ்வாறு, பிந்து மாதவர் என்ற திருநாமத்துடன் காசியில் மகாவிஷ்ணு விளங்குகிறார்.

பிந்து மாதவர் சாட்சாத் லட்சுமிபதி யான ஸ்ரீமன் நாராயணர். அவரைப் பக்தி சிரத்தையுடன் வழிபடுபவர்களுக்கு மறு பிறப்பு கிடையாது. அவர்களுக்குத் தற்போதைய பிறப்பில் ஏழ்மை ஒரு போதும் ஏற்படாது.

அவர்களை நோய்கள் அணுகாது. யம தர்மராஜன் அவர்களை வணங்குவான்.

பித்ரு மாதவரின் பக்தர்களுக்கு இவ்வளவு பெருமை ஏற்படும் என்று ஒரு சம்ஸ்கிருதப் பாடல் தெரிவிக்கிறது.

காசி யாத்திரை செல்பவர்களில் பலர் பிந்து மாதவர் தரிசனம் செய்யாமலேயே திரும்பி விடுகிறார்கள். இது பெரும் தவறு. பிந்து மாதவரைப் பக்தியுடன் அவசியம் தரிசனம் செய்து வழிபட வேண்டும்.

## அஸ்தி போடுதல்

தாயார், தகப்பனார் இறந்துவிட்டால் அவர்களது அஸ்தியைப் பத்திரமாக எடுத்துச் சென்று, காசி திருத்தலத்தில் கங்கையில் போட வேண்டும்.

இதை எவ்வாறு செய்ய வேண்டும் என்று பிரம்ம புராணம் தெரிவிக்கிறது.

இறந்தவரது அஸ்தியை (எலும்புகளை ஆட்டுத்தோல் அல்லது கம்பளம், பட்டுத் துணி இவைகளில் போட்டு வலிமையாகக் கட்ட வேண்டும். தர்ப்பைகளாலும் சுற்ற வேண்டும். நீர், பால் விட்டுப் பிறகு விதிமுறைகளின்படி அதற்கு அபிஷேகம் செய்ய வேண்டும். பின்னர் அந்த அஸ்தியைக் கங்கையில் போட வேண்டும்.

ஒருவரது அஸ்தி (எலும்புகள்) எவ்வளவு ஆண்டுகள் கங்கையில் இருக்கின்றதோ, அவ்வளவு ஆண்டுகள் அவர் புண்ணிய உலகத்தில் வாழ்வார்.

## வாஹீகன் கதை

அஸ்தி போடுவது சம்பந்தமாக ஒரு வரலாறு உண்டு.

கலிங்க நாட்டில் வாஹீகன் என்ற ஒரு பிராமணன் இருந்தான். அவன் அந்தணருக்கு உரிய கடமைகளில் ஒன்றைக் கூடச் செய்யவில்லை. அவற்றுக்கு மாறாக சாஸ்திரங்களில் செய்யத் தகாதவை என்று விலக்கப்பட்டுள்ள தீய செயல்களை அவன் விருப்பத்துடன் செய்தான்.

ஒருநாள் அவன் காட்டுக்குச் சென்ற போது புலி அடித்து மாண்டான். அவனது உடல் மாமிசத்தை விலங்குகளும், கழுகுகளும் தின்றன. ஒரு கழுகு அவனது கணுக்கால் எலும்பை அலகில் எடுத்துக் கொண்டு கங்கை மீது பறந்தது. மற்றொரு கழுகு அதைப் பறிக்க முயன்றது. அந்தக் கணுக்கால் எலும்பு கங்கை நதியில் விழுந்தது.

பாவியான வாஹீகன் நரக லோகத்தில் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தான். அவனது எலும்பு கங்கையில் விழுந்ததால், அவனது பாவம் நீங்கியது. யமதர்மராஜன் அவனைச் சுவர்க்க லோகத்திற்கு அனுப்பி வைத்தார்.

## புண்ணிய உலகம்

அந்த பிராமணன் பல பாவங்களைச் செய்தான். அவற்றின் விளைவாக அவன் மரணம் அடைந்ததும் நரக லோகத்திற்குப் போனான். எனினும் அவனது எலும்புகளில் ஒரு பகுதி புனிதம் மிக்க கங்கை நதியில் விழுந்ததால் அவன் பாவங்களிலிருந்து விடுபட்டு உய்ந்தான்.

காசியில் கங்கை நதியில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ அஸ்தி போடப்பட்டாலும் பாவம் விலகும் என்பதை இந்தவரலாறு சுட்டிக் காட்டுகிறது.

சாஸ்திரங்களில் கூறியுள்ள வண்ணம், புத்திரர்கள் தாயார், தந்தையார் அஸ்தியைக் கங்கையில் போட்டால் இறந்தவர்களுக்குப் புண்ணிய உலகம் கிடைப்பது நிச்சயம்.

அஸ்தி கரைப்பு முக்கியமான காரியம். மரணம் அடையும் தாயாரும், தகப்பனாரும் உன்னத நிலையை அடைய வேண்டும் என்று விரும்புகின்ற பிள்ளைகள், காசி திருத்தலத்தில் அவர்களது அஸ்தியைப் போட வேண்டும்.

புண்ணியம் செய்த பாக்கியசாலிகளுக் குத்தான், பிதிரர்களின் அஸ்தியைக் காசியில் கங்கையில் போடும் வாய்ப்புக் கிடைக்கும்.

காசியில் முதல் நாள் என்ன செய்ய வேண்டும். இரண்டாவது நாள் என்ன செய்ய வேண்டும் என்று ஐந்து நாட்களுக்கு உரிய காரியங்களைக் கூறியிருக்கிறேன். ஐந்து நாட்கள் என்பது வரிசை பற்றிய ஒரு கணக்கு, ஐந்துநாட்கள் மட்டும்தான் காசியில் தங்க வேண்டும் என்று அன்பர்கள் முடிவு செய்யக்கூடாது.

காசியில் பல நாட்கள் தங்கிப் பிதிரர் வழிபாடும் இறைவன் வழிபாடும் செய்ய வேண்டும்.

**சக்தி யாத்திரை**

காசியில் செய்ய வேண்டிய யாத் திரைகள் பல; காரியங்கள் பல; வழிபாடுகள் பல. இவை அனைத்தையும் பக்தி சிரத்தை யுடன் நிறைவேற்ற வேண்டும்.

காசியில் செய்யவேண்டிய யாத்திரை களில் ஒன்று சக்தி யாத்திரை.

கோப்ரேட்ச தீர்த்தத்தில் நீராடி, பாள நேத்ரிகா என்ற அம்பாளைப் பூஜிக்க வேண்டும். ஜேஷ்டவாபி என்ற கேணியில் ஸ்நானம் செய்து, ஜேஷ்ட கௌரியை வழிபட வேண்டும்.

விசால கங்கை என்ற இடத்தில் நீராடி விசாலகௌரியைப் பூஜிக்க வேண்டும்.

லலிதா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, லலிதாதேவியை வழிபட வேண்டும். பவானி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மங்கள கௌரியைப் பூஜித்து, லட்சுமியை பக்தியுடன் ஆராதித்து சக்தி யாத்திரையை நிறைவு செய்ய வேண்டும்.

ஏற்கெனவே சில யாத்திரைகள் குறித்து எழுதியிருக்கிறேன். இவை அனைத்தையும் அவசரம் இல்லாமல் செய்ய வேண்டும்.

காசி யாத்திரையில் ஒரு முக்கிய அங்கம் கயை யாத்திரை.

கயை திருத்தலத்தில் மகிமை என்ன? அங்கு என்ன செய்ய வேண்டும்?

## மகன் என்ற தகுதி

கயை திருத்தலம் பிதிரர்களுடைய நலன்களை உத்தேசித்து பகவானால் சிருஷ்டிக்கப்பட்டது ஆகும்.

தாயாரும், தந்தையாரும் உயிருடன் இருக்கின்றபோது, புதல்வன் அவர்களை நன்றாகப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் விரும்பும் தர்ம காரியங்களையும் புதல்வன் நடத்திக் கொடுக்க வேண்டும். அவர்கள் மரணம் அடைந்தபிறகு, ஒவ்வொரு ஆண்டும் பக்தி சிரத்தையுடன் புதல்வன் அவர்களுக்கு சிராத்தம் செய்ய வேண்டும்.

சிராத்தம் செய்வதற்கு இந்த உலகத் திலேயே மிகவும் சிறந்த இடம் கயை என்ற திருத்தலம். அங்கு சென்று பிதிரர்களை

உத்தேசித்து சிராத்தம், பிண்டதானம் ஆகியவற்றைச் செய்ய வேண்டும்.

கயையில் சிராத்தம், பிண்டதானம் செய்த பிறகுதான் "புத்திரன்" என்ற தகுதி மகனுக்கு உண்டாகும்.

கயையின் மகிமை புராணங்களில் விவரிக்கப்படுகிறது. ஆதிகாலத்தில் கயாசுரன் என்ற பெயரில் ஒரு மாபெரும் அரக்கன் இருந்தான். அவன் சிறந்த தெய்வ பக்தன். அவன் கோலாகல பர்வதத்தில் தவம் செய்தான்.

பகவான் நாராயணன் கோலாகல பர்வதத்தில் பிரசன்னமாகி, "எதற்காகக் கடுமையான தவம் செய்கிறாய்"? என்று கயாசுரனைக் கேட்டார்.

"உலகில் உள்ள எல்லா புண்ணிய தீர்த்தங்களைவிடப் பவித்திரமானதாக எனது சரீரம் விளங்கவேண்டும். இதுவே எனது கோரிக்கை" என்று கயாசுரன் கூறினான்".

"அப்படியே ஆகட்டும்" என்று பகவான் நாராயணன் அவனுக்கு வரம் அளித்தார்.

கயாசுரனின் சரீரம் மிகவும் புனிதமாகி விட்டது. மக்கள் எல்லோரும் அவனது உடலைத் தொட்டுத் தொட்டுத் தங்களது பாவங்களைப் போக்கிக் கொண்டார்கள்.

**சரீரத்தில் யக்ஞம்**

யம லோகம் காலியாகிவிட்டது! பாவங்களுடன் கூடிய மனிதர் எவரும் இல்லை என்ற நிலை உண்டாகிவிட்டதால், பாவிகளைத் தண்டிக்க வேண்டிய வேலை யம லோகத்தில் நடைபெறவில்லை.

பாவங்களைச் செய்பவர்கள் அவற்றுக்கு உரிய தண்டனைகளை அனுபவிக்க வேண்டும் என்பது இறைவனின் இயற்கையான விதி. அந்தவிதி செயல்பட முடியாத நிலை தோன்றிவிட்டது.

மகாவிஷ்ணுவின் யோசனையின் பேரில் பிரம்மா கயாசுரனை அணுகினார். "உனது சரீரம் பரம பவித்திரமானது. அந்தச் சரீரத்தில் யக்ஞம்செய்ய எனக்கு அனுமதி கொடு" என்று பிரம்மா கயாசுரனைக் கேட்டார்.

கோலாகல பர்வதத்தில் கயாசுரன் படுத்துக் கொண்டான். அவனது சரீரமே யாக குண்டமாக அமைந்தது. யக்ஞம் செய்யப்பட்டது. மகா விஷ்ணுவின் துணையால் விக்கினம் அகன்று யக்ஞம் பூரணமாக நன்றாக நடந்துமுடிந்தது.

**பிண்ட தானம்**

"புண்ணியத்திற்கு நன்மை; பாவத்திற்கு தண்டனை" என்ற ஆண்டவனின் விதி முறை மறுபடியும் அமுல் ஆகத் தொடங்கியது.

பரம பக்தனான கயாசுரன் செய்து கொண்ட பிரார்த்தனையின் விளைவாகக் கயை என்ற பெயர் இந்தத் திருத்தலத்திற்குஏற்பட்டது.

இந்த க்ஷேத்திரத்தில் சிராத்தம் செய்தால், பிதிரர்களுக்கு விசேஷ திருப்தி உண்டாகும். பெரும் பாவியாக இருந்து இறந்த ஒருவனை உத்தேசித்துக்

கரையில் சிராத்தம் செய்தால், அவனது பாவம் விலகி அவன் புண்ணிய லோகம் அடைவான்.

கயை திருத்தலத்தின் மத்தியில் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் இருக்கின்றன. அதாவது உலகத்தில் எவ்வளவு புண்ணிய தீர்த்தங்கள் உள்ளனவோ, அவை அனைத்தின் இயல்புகளும் கயை தீர்த்தங்களில் உள்ளன என்று அர்த்தம்.

கயையில் பிண்ட தானம் செய்தால், பிதிரர்களுடைய கடன் (ருணம்) மகனுக்கு நீங்குகிறது.

கயையில் பிதிரர்களுக்காகச் செய்கின்ற பிண்ட தானத்திற்கு இணை எதுவும் இல்லை.

## விஷ்ணு பாதம்

கயை திருத்தலத்தில் பல தேவர்களின் பாதங்கள் இருக்கின்றன என்ற வாயு புராணம் தெரிவிக்கிறது.

விஷ்ணு பாதம், ருத்ர பாதம், பிரம்ம பாதம், ஐந்து அக்னி தேவர்களுடைய பாதங்கள், இந்திர பாதம், அகஸ்திய பாதம், சூரிய பாதம், சுப்பிரமணிய பாதம், கிரௌஞ்ச பாதம், மாதங்கமுனிவரின் பாதம் முதலிய பல திருப்பாதங்கள் அங்கே உள்ளன.

இவற்றில் முக்கியமாக விஷ்ணு பாதத்தில் பிண்டம் போட வேண்டும்.

கயைக்குச் சென்று, சிராத்தம் செய்து, விஷ்ணு பாதத்தில் பிண்டத்தைச் சமர்ப்பிப்பவன்தான் மிக உத்தமமான புத்திரன்.

விஷ்ணு பாதத்திற்கு அருகில் பல்குனீ நதி ஓடுகிறது. அது மிகவும் புனிதமானது. அந்த நதியில் குளித்துவிட்டு, தர்ப்பண சிராத்தம் செய்து, விஷ்ணு பாதத்தில் பிண்டம் போட்டால், பிதிரர்களுக்கு விஷ்ணு பரமபதம் கிடைப்பது உறுதி.

## காரியங்கள்

கயையில் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும்?

1. சங்கல்பம்
2. பல்குனீ நதி தீர்த்த ஸ்நானம்
3. பல்குனீ தீர்த்த சிராத்தம்
4. பல்குனீ நதிக்கரையில் பிண்ட தானம்
5. விஷ்ணு பாத சிராத்தம்
6. விஷ்ணு பாத பிண்ட தானம்
7. அக்ஷய வட சிராத்தம், பிண்ட தானம்
8. கயேச்வரீ கதாதரர், காட்சி கோபலர் முதலிய தெய்வ தரிசனம்
9. கயை அந்தணர்களைத் திருப்தி செய்தல்.
10. காய், பழம், இலை இவைகளைத் தியாகம் செய்ய கயையில் உறுதி ஏற்பது.

## சீதையின் அனுபவம்

ஸ்ரீ ராமபிரான் சீதாதேவியுடன் கயை சென்று சிராத்தம் செய்தார் என்று பத்ம புராணம் தெரிவிக்கிறது.

ஸ்ரீ ராமபிரான் சிரத்தையுடன் சிராத்தம் செய்து கொண்டிருந்தார். பிதிரர்களுக்கான அன்னம் அளிக்கும் நேரம் வந்தது. அதற்காக வரிக்கப்பட்ட பிராமணர்கள் அமர்ந்தார்கள். அன்னை சீதா பிராட்டியார் இலைகளில் பரிமாறத் தொடங்கினார்.

அப்போது, அந்த பிராமணர்களின் சரீரங்களில் ஸ்ரீராமரின் தந்தையாகிய

தசரதரும், தசரதரின் மூதாதையர்களான அஜ மகாராஜரும், ரகு மகாராஜரும் தோன்றினார்கள்.

சீதா தேவி வெட்கத்துடன் இராம பிரானை விட்டு விலகி நின்றாள். "ஏன் விலகி நிற்கிறாய்?" என்று இராமபிரான் கேட்டார்.

"நாதா போஜனம் செய்கின்ற பிராமணர்களுடைய சரீரங்களில் தங்களது தகப்பனார், பாட்டனார், அவரது தகப்பனார் ஆகியோரைப் பார்த்தேன். ஆகவே வெட்கம் ஏற்பட்டு விலகி நின்றேன்" என்று சீதா பிராட்டியார் பதில் அளித்தார்.

ஸ்ரீராமசந்திர மூர்த்தியே சிராத்தம் செய்த பெருமை கொண்டது கயை திருத்தலம்.

கயையில் சிராத்தம் செய்தால், பிதிரர் நேரில் தோன்றுவர் என்பதையும் இந்த வரலாறு உணர்த்துகிறது.

**விஷ்ணு புத்திரர்கள்**

கயையில் தர்மசிலா தர்மபிருஷ்டம் என்ற இடத்திலும், பிரம்ம சிரஸ், கயா சரஸ் என்ற இடங்களிலும் அக்ஷய வட சமீபத்திலும் சிராத்தம் செய்வது பிதிரர்களுக்குப் பரம நன்மை தரும்.

மற்ற இடங்களில் செய்யப்படும் சிராத்தங்களுக்கும், கயையில் செய்யப்படும் சிராத்தத்திற்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. கயையில் பிறந்த பிராமணர்களை மட்டுமே கயையில் சிராத்தங்களுக்கு அழைக்க வேண்டும். வேறு ஊர்களைச் சேர்ந்த பிராமணர்களை அங்கு அழைக்கக்கூடாது.

ஆண்டவன் கயையில் சில பிராமணர்களைத் தோற்றுவித்தான். அந்த பிராமணர்களின் வம்சங்களைச் சார்ந்தவர்கள் அங்கு வாழ்கிறார்கள். அவர்கள் விஷ்ணு புத்திரர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். கயையில் சிராத்தத்திற்கு அவர்களைத் தான் வரிக்க வேண்டும்; வேறு ஊர்களில் பிறந்த பிராமணர்கள் அங்கு சிராத்தத்திற்காக வரிக்கக்கூடாது.

**தாயாரின் நிலை**

கயை திருத்தலத்தில் பல்குனீ நதி தீரத்தில் ஆரம்பித்து சிராத்தங்கள் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். கணவனும், மனைவியும் காலை ஆறு மணிக்கு முன்பாக ஆரம்பித்தால் மாலை ஆறு மணி அளவில் அக்ஷய வட சிராத்தமும், பிண்ட தானமும் முடியக் கூடும்.

பிண்ட தானத்தில் தாயாருக்குத்தான் நிறைய பிண்டங்கள் வைக்க வேண்டும். (தாயார் ஒப்பற்ற தெய்வம், எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவள் தாய். இந்த உண்மையின் பிரதிபலிப்பு, கயை சிராத்தங்களின் ஒவ்வொரு காரியத்திலும் தென்படும்).

தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வசதியாகக் காரியங்களைச் செய்யவும், தங்கி ஓய்வு எடுக்கவும் கயையில் சில இடங்கள் இருக்கின்றன. அங்கு இருப்பவர்கள் பண ஆசை கொண்டவர்கள் இல்லை. அவர்கள் மகிழ்ச்சியுடன் உதவுவார்கள். அவர்களது உதவியுடன் பிதிரர் காரியங்களைக் குறை இல்லாமல் செய்து முடிக்கலாம்.

கயை சிராத்தங்களின் போது வஸ்திர தானம் உள்ளிட்ட சாஸ்திரங்களில் சொல் லப்படும் 16 தானங்கள் செய்வது மிகவும் உத்தமம். வஸ்திரங்களைக் கிளம்பும் இடத்திலிருந்தே வாங்கிக் கொண்டு போய் விடலாம். எத்தகைய வேஷ்டிகளை வாங்க வேண்டும் என் பதை வேத அறிஞர்களிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டு அதன்படி வாங்குவது நல்லது.

**பத்து நாட்கள்**

கயையில் குறைந்த பட்சம் பத்து நாட்கள் கணவனும் மனைவியும் தங்கி, 45 இடங்களில் சிராத்தங்கள் செய்வது பெரும் புண்ணியத்தைத் தரும்.

சிராத்த காரியங்கள் முடிந்தபிறகு தான் ஆலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்ய வேண்டும்.

கயையில் சிராத்த காரியங்கள் முடிந்ததும், கயை பிராமணர்கள் எல்லாம் திருப்திகரமாக நடந்தது" என்று சொல்லு வார்கள். அவ்வாறு அவர்கள் சொல்ல வில்லை என்றால், கயை சிராத்தத்திற்குப் பலன் இல்லை என்று அர்த்தம்.

கயை பிராமணர்கள் பண ஆசை கொண்டவர்கள் இல்லை. அவர்கள் தூய்மை யாக சாஸ்திரப்படி வாழ்கிறார்கள். "நீங்கள் சிராத்தத்தை முறைப்படி சாஸ்திரம் தவ றாமல் செய்தீர்கள்; எங்களுக்கு திருப்தி; உங்களை வாழ்த்துகிறோம்" என்று அந்த கயை அந்தணர்கள் கூறும்படியாக சிரத்தை யுடன் சிராத்த காரியங்களைச் செய்ய வேண்டும்.

**ஒரு தீர்மானம்**

அக்ஷய வட சிராத்தம் முடிந்த பிறகு, ஒரு தீர்மானத்தைக் கணவனும், மனைவியும் ஏற்கவேண்டும்.

சம்சார வாழ்க்கையில் ஏற்படக்கூடிய காம, குரோத லோபங்களை அன்று முதல் விலக்கிக் கொள்ளுவதாகத் தீர்மானிக்க வேண்டும்.

"காசிக்குப் போய் வந்தீர்களே, எதை விட்டீர்கள்?" என்று காசிக்குச் சென்ற வர்களைப் பிறர் கேட்பது வழக்கம்.

இந்தக் கேள்வி பல நூறு ஆண்டு களாகக் கேட்கப்பட்டு வந்துள்ளது. காசிக்குச் சென்றால் எதை விடவேண்டும்? ஆசையைக் கைவிட வேண்டும்; கோபத்தைக் கைவிட வேண்டும்; வெறுப்பு உணர்ச்சியைக் கைவிட வேண்டும்.

காசிக்கு யாத்திரை மேற்கொள்ளு வதற்கு முன்பாக இருக்கக்கூடிய மனித இயல்புகள் வேறு; காசி யாத்திரைக்கு பிறகு அமைய வேண்டிய மனித இயல்புகள் முற்றிலும் வேறு.

தீய குணங்களை விடுவதுதான், காசி யாத்திரையின் முக்கியமான நோக்கம்.

"காசி, பிரயாகை பணிகளை முடித்த பிறகு, கயை நகருக்கு வந்தேன். பிதிரர்க்கு உரிய காரியங்களைச் சிரத்தையுடன் முடித்தேன். இனிமேல், எனது உலக வாழ்க்கை அமைதியாகக் கழிந்து, நான் இறைவனது அடிகளை அடைவதற்கு உதவியாக, எனது தீயகுணங்களை என்னைவிட்டு இன்று முதல் அகல

வேண்டும்" என்று கயையில் தீர்மானம் கொள்ள வேண்டும்.

**ஓர் அடையாளம்**

இந்தத் தீர்மானத்தை அறிந்து கொள் வதற்காகத்தான், "காசிக்குச் சென்று நீங்கள் எதைக் கைவிட்டீர்கள்"? என்று மற்றவர்கள் கேட்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கு ஓர் அடையாள மாக ஓர் இலை, ஒரு பழம், ஒரு கறி காய் ஆகியவற்றைக் கயையில் காரியங்கள் முடித்த பிறகு, விலக்கிக் கொள்ளுவதாக அறிவிக்கும் சடங்கு நடக்கிறது.

நமக்கு மிகவும்விருப்பமான நாம் மிகவும் ஆசையுடன் சாப்பிடக்கூடிய மூன்று பொருள்களை அன்று முதல் கைவிட வேண்டும்.

உதாரணமாக எனக்கு (இந்தக் கட்டுரை ஆசிரியருக்கு) மாம்பழம் மிகவும் பிடிக்கும். குறிப்பாக பெங்களூர் மாம்பழம் என்றால் மிகவும் ஆசையுடன் சாப்பிடுவேன். "மாங்காய், மாம்பழம் இரண்டையும் இனிமேல் தீண்ட மாட்டேன்" என்று கயையில் நான் உறுதி எடுத்துக் கொண்டேன். (மாங்காய் ஊறுகாயும் விலக்கப்பட்ட பொருள்களில் அடங்கும்)

**மீண்டும் இராமேசுவரம்**

கயையில் காரியங்கள் முடிந்ததும், காசி யாத்திரையில் பெரும் பகுதி நிறைவு பெற்றது என்று சொல்லலாம். அதற்குப் பிறகு மீண்டும் காசிக்குத் திரும்பி அங்கே மீதமுள்ள கர்மாக்களை முடித்துக் கொண்டு தங்களது ஊர்களுக்குத் திரும்பலாம். அதன் பிறகு இரண்டு முக்கியபணிகள் மட்டுமே செய்ய வேண்டும்.

பிரயாகை, காசி, கயை, யாத்திரை முடிந்து ஊர் திரும்பியதும் இராமேசுவரம் மறுபடியும் செல்ல வேண்டும். பிர யாகையில் சேகரித்துள்ள கங்கை நீரைக் கொண்டு, ஸ்ரீ இராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்விக்க வேண்டும்.

இராமேசுவரத்தில் மீண்டும் ஒரு முறை சிராத்த காரியம் செய்வதும், ஸ்ரீ ருத்ரஜபம் நடத்துவதும் நல்லது.

பிறகு ஊர் திரும்புங்கள். இப்போது தான் காசி யாத்திரை முழுமையாகப் பூர்த்தி ஆகிறது.

ஊர் திரும்பியதும், ஒரு நல்ல நாளில் வீட்டில் ஹோமத்துடன் பூஜை செய்ய வேண்டும். யாத்திரை மங்களகரமாக முடிந்ததற்காகப் பகவானுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

அன்றைய தினம், முடிந்த வரையில் பலரை அழைத்து அன்னதானம் செய்ய வேண்டும்.

இந்தப்பூஜையுடன் காசி யாத்திரை முற்றிலும் நிறைவு பெறுகிறது.

# சிறுநீரகக்கல் (Kidney Stone / Renal Stone)

**Dr. S. டிசிஜந்தி அவர்கள்**
*துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலை,*
*தெல்லிப்பழை.*

சிறுநீரகத் தொகுதியில் ஏற்படும் கடினமான படிவானது சிறுநீரகக்கல் எனப்படுகிறது. இது கனியுப்புக்கள், அமில உப்புக்களினால் ஏற்படுகிறது. பெரும்பாலும் ஆண்களிற்கு ஏற்படுகிறது. சிறுநீரகத் தொகுதியில் எந்த ஒரு பகுதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

**ஏற்படுவதற்கான காரணம்**

1. நீரினை குறைவாகப் பருகுதல்.
2. உணவு முறை
3. சிறுநீர் கழிப்பதில் தாமதம்
   உ-ம் : தூரப்பயணங்கள், கடமை நேரங்களில் சிறுநீர் கழிப்பதில் தாமதம்.
4. பிற நோய்நிலைகள்
   உ-ம் : Hyperparathyroidism
   Crohn's disease
5. சிறுநீரகத் தொகுதியில் கிருமித் தாக்கம் (UTI)
6. பரம்பரை
7. சில மருந்து வகைகளைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தல்.
   Antiacid drug – ஏற்படும்.

**அறிகுறிகள்**

பெரும்பாலும் ஆரம்ப கட்டத்தில் அறிகுறிகள் தென்படுவதில்லை. சிறுநீர்ப் பாதையில் அடைப்பு அல்லது கல்லானது அசைய ஆரம்பிக்கும்போது அறிகுறிகள் தென்படும்.

- ♦ சிறுநீர் கழிக்கும்போது வேதனை
- ♦ சிறுநீரானது சிவப்பு அல்லது சிவப்பு கலந்த நிறத்தில் வெளியேறுதல்.
- ♦ சிறுநீரானது அடிக்கடி எரிச்சலுடன் வெளியேறுதல்.
- ♦ கீழ் முதுகுப்பகுதியில் வேதனை
- ♦ இவ்வேதனையானது அடிவயிற்றுப் பகுதியை நோக்கி செல்லுதல்.
- ♦ குமட்டல், வாந்தி, வியர்வை போன்ற வேதனையின்போது ஏற்படல்.
- ♦ சிறுநீரானது கலங்கலாகவும், துர் மணமுடையதாகவும் இருத்தல்.
- ♦ குளிர் நடுக்கத்துடனான காய்ச்சல்.

இவ்வறிகுறிகளானது ஆளுக்கு ஆள் மாறுபடுவதுடன் ஒன்றோ, பல அறிகளோ தென்படலாம்.

**அறிவுரைகள் :**

1. தினமும் கொதித்தாறிய நீரினை ஏறத்தாழ 3 லீற்றர் வரை குடித்தல்.
2. உப்பு அதிகமுள்ள உணவுகளைக் குறைந்தளவில் உட்கொள்ளல்.
3. இளநீரினை வாரத்தில் 3 முறையாவது பருகுதல் சிறந்தது.

4. பழவகைகளைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளல்.

உ-ம் : வாழை, பப்பாசி, தோடை / எலுமிச்சை, அன்னாசி

5. தேனீர், கோப்பி அருந்துவதைத் தவிர்த்தல்.

6. வைத்திய ஆலோசனையின்றி குடற் புண்ணிற்கு மருந்து பாவிப்பதனைத் தவிர்த்தல்.

7. தினமும் ஒரே வகையான மரக்கறிகள், உணவு வகைகளை அதிகமாக எடுத்தலைத் தவிர்த்தல்.

உ-ம் : முருங்கைக்காய், பசளிக்கீரை, பீற்றூட், தக்காளி, வோர்க்கடலை, கோவா, கோலி பிளவர் போன்றன.

8. சொக்லேட் அதிகம் உண்பதைத் தவிர்த்தல்.

9. பியூரின் அதிகம் உள்ள இறைச்சி, மீன், பால், பால் பொருட்கள் என்பவற்றை அளவாக உணவில் சேர்த்தல்.

10. முள்ளங்கி, சாறணை, வாழைப்பூ, வாழைத்தண்டு, வெள்ளரிப்பிஞ்சு, புதினாகீரை, பூசணி, பார்லி அரிசி, நன்னாரி போன்றனவற்றை உணவில் அடிக்கடி பயன்படுத்துதல்.


11. ஒரு மேசைக்கரண்டி வெந்தயத்தினை ஊற வைத்து மறுநாள் காலையில் குடித்தல்.

12. கொள்ளு 2 மேசைக்கரண்டி எடுத்து 4 ரம்லர் நீர்விட்டு அவித்து 1 டம்ளர் வரை வற்றியதும் ஆறவிட்டு பருகுதல் சிறந்தது.

மேற்கூறியவற்றைக் கைக்கொள்வதுடன் வைத்தியரிடம் சென்று சிறுநீர்க்கல் உள்ளதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் சிறுநீர்க் கல்லானது பல வகைகளில் காணப்படுவதனால் அவற்றிற்கு ஏற்ற உணவுகளை வைத்திய ஆலோசனைப்படி உண்ணுதல் இன்றியமையாதது.

## இறைவனை அறியமுடியுமா?

**குவித்து வைக்கப்பட்ட சர்க்கரை மீது ஏறி, ஒரு எறும்பு எவ்வளவுதான் முயற்சி செய்து வயிறார உண்டாலும், எடுத்துச் சென்றாலும் அந்த சர்க்கரைக் குன்று சிறிதும் பாதிக்கப்படுவதில்லை. முன்பிருந்தபடியே இருக்கும். அதுபோல, பக்தர்கள் எவ்வளவுதான் பரவச நிலையில் ஆடினாலும், பாடினாலும், இன்னும் யாராலும் முழுமையாக அறியப்படாதவராகவே இருக்கிறார் கடவுள்.**



**- இராமகிருஷ்ண பரமஹம்சர்**

# பருத்தித்துறை சிவன்கோவிலடி தெருமூடி மடம்

[ தொடர்ச்சி....]

இன்றும் பலர் அதிக தூரத்திலிருந்து வருவோர் தங்குவதற்கு உறவினர்கள் இல்லாத நிலையில் தெருமூடி மடத்திலேயே தங்கிவிட்டே செல்வார்கள். இன்றும் கூடப் பார்த்தால் 60, 70 வயது நிரம்பிய பெரியோர்கள் இளைப்பாறுவதற்கும் கூடிக் கதைப்பதற்கும் ஒரு நாளைக்கு ஒரு தடவை என்றாலும் சிறிது நேரம் இதில் இருக்காமல் செல்லமாட்டார்கள். இதனால் தான் இன்றும் இம்மடம் பல்வேறு வீதி அபிவிருத்திகள் என்று வந்து இதை உடைக்க முற்பட்டபோதும் அக்காரியமது தோல்வியில் அமைந்ததும் குறிப்பிடத் தக்கது. அத்தோடு நோயினால் துன்பப் படுகின்ற பலருக்கும் இவ்விடம் அடைக்கலம் கொடுப்பதோடு; பொழுது போக்குகின்ற இடமாகவும் காணப்படுகிறது.

யாழ்ப்பாண பண்பாட்டு பாரம்பரியத்தைப் பேணும் வகையில் பண்பாட்டு தொன்மைகள் இருப்பதுபோல பருத்தித் துறைக்கென்றும் தனித்துவமான பண்பாட்டு குறிகாட்டிகள் உள்ளன. அவற்றில் ஒன்று தான் தெருமூடி மடம் ஆகும். யாழ்ப்பாணத்தில் பண்டாரமடம், உப்புமடம், முத்தட்டுமடம், மருதனார்மடம், ஆறுகால் மடம், கந்தர்மடம், நாவல்மடம், செட்டியார் மடம், சுப்பர்மடம், ஓட்டுமடம், பண்டத்தரிப்பு மடம், சாரையடிமடம், சங்கத்தானை மடம், பனை முனைமடம், நெல்லியடிமடம், திருநெல்வேலிமடம், மடத்துவாசல் ஆகிய இடங்களில் இத்தகைய தங்குமிடங்கள் இருந்த தற்கான சான்றுகள் இருந்தாலும், பருத்தித் துறை தெருமூடிமடம் போல தெருவை மூடி இரு மருங்கிலும் இருந்துள்ளன என்பது வெளிப்படையான உண்மையே.

மனிதநேயத்தைக் கருத்திற்கொண்டு மக்களின் நீர்த்தாகம், தண்ணீர்த் தேவைகளை நிறைவு செய்யும் முயற்சியில் பாதையின் இடையிடையே கிணறுகள் தோண்டி அக்கிணறுகளுக்கு அருகிலேயே தண்ணீர்த் தொட்டிகளை அமைத்து கிணற்றில் இருந்து பெறப்படும் நீரை மனிதனுக்கு மட்டும் அன்றி ஆடு மாடு போன்ற கால்நடைகளும் விலங்குகளும் தாகம் தீர்க்க தொட்டிகளைக் கட்டினர். இவற்றினைக் கட்டிய பிற்பாடு ஏதோ ஒரு குறைபாட்டைக் கண்டுணர்ந்தனர். அதன் பயனாக ஆவுரஞ்சிக் கல்லை தண்ணீர்த் தொட்டிக்கு அருகில் அமைத்தனர். ஆடு, மாடு தண்ணீர் அருந்திய பின் உடம்பில் ஏற்பட்டிருக்கும் நமைச்சலை அக்கல்லிலே உரஞ்சிப் போக்கிடும். இந்தக் கல்லு 3 – 4 அடி உயரமும் ஒன்றரையடி அகலமாகவும் இருந்தது.

வாகனங்கள் போக்குரத்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் மாட்டு வண்டியே மக்களுக்குப் பெரிதும் உதவி வந்தன. மாட்டுவண்டிகளின் எண்ணிக்கையும் குறைந்திருந்தன. இதனால் மாட்டு வண்டில்களில் பொதிகளை ஏற்றிச் செல்ல

முடியாதவர்கள் கால்நடையாக நீண்ட தூரங்களுக்குப் பொதிகளைச் சுமந்து செல்லும்போது இடையிடையே இறக்கி இளைப்பாறுவதற்கு மக்கள் பெரிதும் சிரமப்பட்டார்கள். இதனை அவதானித்த நல்லமனம் படைத்த மக்கள் ஏற்றதான பாதையோரங்களில் 5 அடி அகலமும் 4– 5 அடி உயரமான ஒரு மேடை போன்ற சுமை தாங்கி அமைத்தார்கள். இதனால் தத்தமது பொதிகளைத் தாங்களாகவே இறக்கி வைத்து திரும்பவும் தூக்க சுமை தாங்கிக் கல் கைகொடுத்தது. இவற்றினை அமைத்து விட்ட ஒரு திருப்தியில் மக்கள் வாழ்ந்தனர்.

100 வருடங்களுக்கு முன்னோக்கிப் பார்த்தால் பருத்தித்துறையில் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப் பட்ட இடமாகவும் ஒரு துறைமுகமாகவும் விளங்கியிருந்தது. இதனால் பல்வேறு பட்ட மக்களும் இங்கு வந்து குவியும் இடமாக இது திகழ்ந்தது. வடை, அப்பம், தோசை ஆகிய தின் பண்டங்களை வாங் குவதற்கு இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் வருகை தந்தனர். இன்றுபோல் மருதங்கேணி பிரதேச செயலகம், கரவெட்டி பிரதேச செயலகம் என முன்னர் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இப்பிரதேச மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பருத்தித்துறை மத்திய பகுதிக்கு வருகை தந்தனர். இம் மக்கள் இளைப்பாறவென தனியான இடம் இருக்கவில்லை. இந் நிலையும் கால்நடைப் பயணங்கள்; வண்டிப் பாரங்கள்; இராப்பயணங்கள், சிற்றுண்டி விடுதி, திருடர் தொல்லை, குறித்த நேர பிரயாணத் தடங்கல், பேய் பிசாசு, மூடக் கொள்கைகள், திருத்தல யாத்திரை என்பவற்றின் தேவையை உணர்ந்த மக்கள் பருத்தித்துறை தெருமூடி மடத்தை உருப்பெறச் செய்தார்கள்.

இத்தெரு மூடிமடம் 150 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். இதன் கட்டடக்கலை திராவிடக் கலைப்பாணியில் அமைந் துள்ளது. வெண் வயிரச் சுண்ணக்கல்லினால் உருவாக்கப்பட்ட தூண்கள், அதன் கபோ தங்கள் மற்றும் தளம் ஆகிய சிறந்த கொத்து வேலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. இங்கு 16 தூண்கள் காணப்படுகின்றன. இவற்றுள் 06 தூண்களில் தமிழ் வரிவடிவில் சாசனங்கள் பொறிக்கப்பட்டு இருக்கின்றன. இத்தெருமூடி மடத்தினது மேற்கூரையானது தூண்களின் கபோதத்தில் இருந்து இரு பக்கங்களிலும் சமாந்தரமாக மேலெழுப்பப் பட்டுள்ளன. ஓர் அரைச்சுவரின் மீது அமைக் கப்பட்ட விட்டத்துடன் கூடிய ஒரு சட்டக் கோப்பினால் தாங்கப்பட்டுள்ளது. இத்தெரு மூடி மடத்தின் ஊடான போக்குவரத்து நடைமுறைகளுக்கு கூரை எந்தவித தடை யாகவும் அமையவில்லை. 150 வருடங் களுக்கு முன் இது கட்டப்பட்டாலும் எதிர் கால நிகழ்வுகளின் சிந்தனையிலிருந்தும் எமது முன்னோர்கள் தவறவில்லை என்பதை உண்மையாகவே உணரமுடிகிறது.

பல்வேறுபட்டோருக்கு பல பாதுகாப்புக் களையும் மன ஆறுதல்களையும் வழங்கிய தெருமூடிமடம் காலப்போக்கில் என்ன கதியாகும் என்பது கேள்விக்குறியே. இத்தெருமூடி மடத்தோடு இணைந்திருந்த சுமைதாங்கிக்கல், ஆவுரஞ்சிக்கல், துலாக்

கிணறு மற்றும் நீர்த்தொட்டி ஆகியன முற்றாக செயலிழந்து இருந்த இடம் விட்டு நகர்ந்துவிட்டன. தெருமூடி மடம் என்ற பெருமையுடன் இதுவொன்றுதான் மிஞ்சி யிருக்கிறது. இதன் பழமை உணராத பலர் இதனைப் பகடையாய் பயன்படுத்த முயலலாம். இந்தப் பாரம்பரிய தெருமூடி மடத்திற்கு ஒரு காவலாளியை நியமித்து இந்தப் பழமையை இன்னும் எத்தனையோ சந்ததியினருக்குக் கையளிக்கலாம்.

இந்த தெருமூடி மடம் யாவருக்கும் புனிதமானது. இதனைத் துஷ்பிரயோகம் செய்யவோ அல்லது சேதப்படுத்தவோ யாருமே முனையாத வகையில் பாது காப்பது நமது கடமை.

விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது என்பதற் காக பழமையை விட்டுப்போக முடியாது. தெருவை மூடிக் கிடந்தாலும் எத்தனை ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு அடைக்கலப் பொக்கிஷமாக விளங்கும் இந்தத் தெருமூடி மடம் 150 வருடங்களுக்கு எம் முன்னை யோர்களால் பாதுகாக்கப்பட்டது போல நாமும் இன்னும் பல நூற்றாண்டு காலம் கட்டிக் காக்கவேண்டும்.



'நமது சைவ சமயிகள் ஒற்றுமை யுயைர்களாய்த் திரண்டு தேவாலயங்கள் எங்கும் சைவாகமங்களில் விதித்த இலக்கணங்களமைந்த பிராமணர்களைக் கொண்டே பிரதிட்டை, பூசை, திருவிழா முதலியவற்றை விதி வழுவாது இயற்று வித்தலும், வாண விளையாட்டு முதலிய வேடிக்கைகளின் பொருட்டுப் பொருளைச் செலவழித்தலையொழித்து, சிவபக்திமான் களும் பண்ணோடு ஓத வல்லவர்களுமாகிய ஓதுவார்கள் பலரை நியோகித்துப் பூசா காலத்தும் உத்சவகாலத்தும் யாவருக்கும் மனங்கசிந்துருக, உரோமம் சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரியச் சிவன்மேல் அன்பு செனிக்கும் பொருட்டுத் தேவாரமும் திருவாசகமும் ஆகிய தமிழ் வேதத்தை ஓதுவித்தலும், சைவப் பிரசாரகர்களை நியோகித்து வாரந்தோறும் கடவுளது மகிமையையும் புண்ணிய பாவங்களையும் அவற்றின் பலன்களையும் கடவுளை வழிபடும் முறைமையையும் குறித்துச் சனங்களுக்குப் போதிப்பித்தலும் செய்வார்களாயின், அறியாமை நீங்கும்; புண்ணியம் வளரும்; சிவபக்தி தழைக்கும்; மாதமும் மழை பெய்யும்; பஞ்சம் ஒழியும்; குள்ளநோய் குன்றும்; உலகம் உய்யும்.

- ஆறுமுக நாவலர்

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**சிவராத்திரி பெருவிழா**

அருள்மிகு கௌரி இணை திருக் கேதீச்சர நாதர் திருக்கோவில் மகா சிவராத்திரிப் பெருவிழா 27-02-2014இல் சிறப்பாக நடைபெற திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாக சபை ஏற்பாடு செய் துள்ளது. மன்னார் அரச அதிபர், பிரதேச சபை செயலர், ஆலய நிர்வாக சபை இணைந்து பொதுமக்களின் நன்மை கருதிப் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். ஆலய சுற்றாடலின் தூய்மையைப் பேணுவதற்காக பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

**கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் திருக்கோவில்**

பல வருட இடைவெளிக்குப் பின் கொடியேற்றித் திருவிழா நடைபெற்று வருகிறது. 27-02-14 சிவராத்திரி நாளில் பல லட்சம் மக்கள் வழிபாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது. தெல்லிப்பழை பிரதேச செய லகம், வலி வடக்கு பிரதேச சபை, நகுலேஸ்வர ஆதீனம் சகல ஏற்பாடு களைச் செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

**நயினை நாகபூசணி அம்மன் கோவில்**

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினை நாகபூஷணி அம்மன் கோவில் வரலாறு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு சமீபத்தில் வெளியிடப்பட்டது.

**இணுவில் அறிவாலயத்தில் ஆன்மீகவுரை**

இணுவில் அறிவாலயத்தில் 13-02-2014 அன்று இந்தியப் பேராசிரியர் லட்சுமணனின் சிறப்புரை இடம் பெற்றது. அறிவாலய நிர்வாக சபைத் தலைவர் திரு.அ.குகதாசன் அவர்களின் தலைமையில் சிறப்புரை இடம்பெற்றது.

**பஞ்சாங்கம் தொடர்பாக சிறப்புக் கூட்டம்**

இந்து கலாசார அமைச்சு 2015ஆம் ஆண்டு சைவ சமய விழாக்கள் தொடர்பாக நாள் நிர்ணயம் செய்து, விடுமுறைப் பட்டியலில் சேர்ப்பதற் காகவும், 2014ஆம் ஆண்டில் சிலசமய முக்கியத்துவம் மிக்க நாள்கள் தொடர் பாக பஞ்சாங்க முரண்பாட்டைத் தீர்ப்பதற்காகவும் கூட்டம் கூட்டப்பட்டது. திருமதி. சாந்தி நாவுக்கரசன் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

**கல்வி நிதி, துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு**

சங்கானை நிகர வயிரவர் ஆலயத்தில் ஒன்பதாம் திருவிழா உபயகாரர் யாழ். மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சையில்

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற இரு மாணவரைக்கௌரவித்து நிதி வழங்கினர். மேலும் உதவி தேவைப்படும் குடும் பத்தைச் சேர்ந்த 5 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து துவிச்சக்கரவண்டி, காலணி என்பவற்றை வழங்கினர். சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியா லயம், சங்கானை அமெரிக்கமிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் பயன் பெற்றனர்.

**தெல்லிப்பழை காசி விநாயகர் கோவில் மகாகும்பாபிஷேகம்**

மிகப்பழமை வாய்ந்த தெல்லிப்பழை வீணாக்கடவை காசிவிநாயகர் தேவஸ் தானத்தின் மகா கும்பாபிஷேகம் 19-03-2014 புதன்கிழமை காலை 9.42 தொடக்கம் 10.49 வரையுள்ள சுப வேளையில் நடை பெறவுள்ளது. ஆலயத்தில் பல புதிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாக அறங்காவலர் கலாநிதி. முருகையா முரளிதரன் அறிவித்துள்ளார்.

**ஒதியமலை வீடமைப்புத்திட்டம் கையளிப்பு**

சுவாமி இராமதாஸ் அறக்கட்டளை யினர் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டிசுட்டான் ஒதியமலைப் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட 39 குடும்பங் களுக்கு சுமார் இருபது லட்சம் பெறுமதியான வீடுகளை அன்பளிப்பாக அப்பகுதியில் உருவாக்கி வழங்கினர். கடந்த 06-02-2014 அன்ற திரு. மு.பால சிங்கம் தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது. கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் முதல்வர், கலாநிதி ஆறு. திருமுருகன், முல்லை மாவட்ட அரச அதிபர் திரு.நா. வேதநாயகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 : 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 : 222 3645**



# பருத்தித்துறை சிவன்கோவிலடி தெருமூடி மடம்

## தெருமூடி மடம் என்றால் என்ன?

பருத்தித்துறை பட்டினத்தின் பிரதான வீதியிலிருந்து கிழக்குப் புறமாக தும்பளை வீதியில் அமைந்துள்ள பழமையான ஒரு பாரம்பரியமே தெருமூடி மடமாகும். இது இடது, வலது ஆகிய இரு பக்கமும் தரையிலிருந்து 2 அடி உயர்த்தப்பட்டு நீளம் வரை திண்ணையாக்கப்பட்டு, 20 அடி உயர்வாகக் கூரையமைக்கப்பட்டு, இரு மருங்கையும் மூடி வெயில் படாத வகையில் அவ்வீதியால் பயணிப்போர் இளைத்துக் களைத்து வருகையில் அவ்விடத்தில் இருந்து இளைப்பாறிக் கொள்வதற்காக இன்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதே இந்த தெருமூடி மடம்.

பருத்தித்துறை நகரில் தெருமூடி மடங்கள் மந்திகை, மாலி சந்தி ஆகிய இடங்களில் இருந்தபோதும் தற்போது பருத்தித்துறை தெருமூடிமடம் மட்டுமே எஞ்சியிருக்கிறது. ஏனைய இரண்டு இடங்களில் இருந்த தெருமூடி மடங்கள் இடிக்கப்பட்டு உரிய பராமரிப்பு இன்றிக் கைவிடப்பட்ட நிலையில் "இதுதான் அது" என்று சொல்லும் மோசமான நிலைக்கு அவையிரண்டும் தள்ளப்பட்டுவிட்டன.


முன்னைய காலங்களில் வாகன வசதிகள் குறைவாக இருந்தது. இதனால் மக்கள் எங்கும் எதனைப் பெறுவதாக இருந்தாலும் நடைப்பயணம் மூலமாகவே அவற்றினைப் பெற்றுக் கொண்டார்கள். பருத்தித்துறையிலிருந்து செல்வோரும் ஏனைய இடங்களில் இருந்து வருவோரும் சுமை தாங்கிகளுடன் வருகின்றபோது இவ்விடத்தில் இருந்து இளைப்பாறி, உட்கார்ந்துவிட்டு அயல் ஊர்களுக்கும் அதிலும் குறிப்பாக தும்பளை, மாதனை, நெல்லண்டை, கற்கோவளம், வராத்துப்பளை, வல்லிபுரம் ஆகிய ஊர்களுக்கும் உறவினர்களின் வீடுகளுக்கும் செல்வார்கள்.

( தொடர்ச்சி 52ஆம் பக்கம் பார்க்கவும் )



பல லிங்கங்களால் அமைந்த உலக அதிசயத் திருக்கோவில்





ANDRA DIGITAL PRINTERS T.P. 021 222 8929